# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௨௨ } விய—ஆனி 1946—ஜூன் { மலர் ௩

## பொழிற்றொண்டர் கருத்துரைகள்.

### கரந்தைப் புலவர் கல்லூரி.

நம் சங்கத்தின் முதற்றலைவர் தன்னலங்கருதாச் செந்நெறியாளர், செந்தமிழ்ப்புரவலர், தமிழவேள், இராவு சாகிபு த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் முயற்சியின் பயனாகத் தோன்றிய நம் கரந்தைப் புலவர் கல்லூரி அதனை நிறுவியார் உள்ளமபோலச் சிறந்துவிளங்கும் திறம் தமிழன்பர்கள் எல்லாருக்கும் பெருமகிழ்ச்சி தரும்.

நம்கல்லூரி, சென்னைப்பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பெற்று, 1941 ஆம் ஆண்டில் புகுமுகவகுப்புடனும் வித்துவான் (7D தமிழ்) தொடக்கநிலை முதல் வகுப்புடனும் தொடங்கி, புகுமுகத் தேர்வுக்கு 1942ஆம் ஆண்டுமுதலும், தொடக்கநிலைத் தேர்வுக்கு 1943 ஆம் ஆண்டு முதலும், வித்துவான் நிறைவுத் தேர்வுக்கு 1945 ஆம் ஆண்டுமுதலும் மாணவரை அனுப்பிவருகின்றது.

ஒவ்வொரு ஆண்டும் பல்கலைக் கழகத் தேர்வுக்கு அனுப்பப்பெற்ற மாணவருள் மிகப் பெரும்பகுதியினர் தேர்ச்சியுற்று வருகின்றனர். வழக்கம்போலவே இவ்வாண்டும் தேர்ச்சியளவு பெருமகிழ்ச்சி தரத் தக்கதாயிருக்கின்றது. புகுமுகத் தேர்வுக்குச் சென்ற ஏழு மாணவருள் அறுவர் வெற்றிபெற்றுள்ளார். வித்துவான் தொடக்க நிலைத் தேர்விற்குச் சென்ற பன்னிருவருள் பதின்மர் தேர்ச்சிபெற்றுள்ளார். வித்துவான் நிறைவுத் தேர்விற்குச் சென்ற பதின்மூவருள், முதல் தரத்தில் மூவரும், இரண்டாந்தரத்தில் ஒருவரும், மூன்றாந்தரத்தில்

ஆறுபேரும் ஆகப் பதின்மர் தேர்ச்சிபெற்றனர். பல்கலைக்கழகத்து 7 D வித்துவான் தேர்வில் முதற்றரத்தில் வெற்றிபெற்ற இவருள் மூவர் நம் கல்லூரிமாணவர் என்று தெரிந்து நம் சங்க உறுப்பினரும் பிறரும் பெருமிதம் கொள்வார்கள். நம் கல்லூரி நாளும் நாளும் சிறந்து வளர்வதாக.

இவ்வாண்டு தேர்ச்சிபெற்ற மாணவர்கட்கெல்லாம் சங்கத்தின் பாராட்டுதலையும் எம் மகிழ்ச்சியையும் தெரிவிக்கின்றோம். இத்தகைய சிறந்த வெற்றிபெறுவதற்குத் தக்க முறையில் பயிற்சிதரும் கல்லூரித் தலைவருக்கும் ஏனைய ஆசிரியருக்கும் சங்கத்தின் கடப்பாட்டையும் எம் பாராட்டையும் கூறுகின்றோம்.

* * * *

## மாட்சிமிக்க மன்னர் மன்னன் வெள்ளணிவிழாப் பாராட்டு.

மாட்சிமை தங்கிய நம்மன்னர் மன்னன் ஆறும் சார்ச்சு அவர்கள் வெள்ளணி மங்கல நாளில், வழக்கம்போலவே, பொதுத் தொண்டில் புகழுற்ற சிறப்புடையார் பலர் பாராட்டப்பெற்றுப் பட்டங்கள் வழங்கப்பெற்றனர். இவ்வாண்டு தமிழறிஞர் பலரும் இம்முறையில் பாராட்டப்பெற்றிருக்கும் பெற்றிமை கண்டு பெரிதும் மகிழ்கின்றோம்.

நம் கரந்தையிற் பிறந்து சென்னையிற் சிறந்துவிளங்கும் அறப் பெருஞ்செல்வர், வடமொழியும் தென்மொழியும் ஐயந்திரிபறக் கற்றுத் துறைபோகிய பேரறிஞர், திருவொற்றியூரான் அடிமை என்னும் சிறப்புப்பெற்றவர், பன்னாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழ்மொழியில் பெயர்த்தல்வேண்டும் என்னும் பாரதியார் மொழிக்கு இலக்கியமாய், எழுதாக்கிளவியாக ஆரிய மறையார் நால்வருணத்துள் மேலவரல்லார் ஏனையோரும் பயிலற்கும் கேட்டற்கும் இயலாதிருந்த வேதங்களைத் தமிழாக்குவித்தருளுபவர், பொதுநலம்பேணும் பல அறநிலையங்களைப் புரப்பவர், புதுநிலையங்களைத் திறப்பவர், சிறப்பாக நம் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு ஆரண்டிலக்கம் வெண்பொன்னளி பெருங்கொடை வள்ளல் திருவாளர் த. ப. இராமசாமி பிள்ளை அவர்களது பெருந்தகவறிந்து அதற்குச் சிறு அறிகுறியாக அவர்கட்கு இராவு சாகிபு என்று சிறப்புச் செய்ததற்கு யாம் பெரிதும் மகிழ்ந்து அரசியலாரையும் நம் சங்கக் குடிதாங்கி திரு. பிள்ளை அவர்களையும் பாராட்டிப் பெருமை கொள்கின்றோம்.

பெருங்கொடை வள்ளலும், திக்கற்ற மாணவர்கட்குக் கல்வி பயில வேட்கையுறும் திரளான ஏனைய மாணவர்க்கும் கல்விச் செல்வம் அளித்து மகிழும் புரவலருமாகும் நம் சங்கத் தலைவர் அவர்களின் இளவல், தம் பெயருக்கேற்பத் தூய்மையும், கைம்மாறு கருதாக் கொடையும் சிறந்து விளங்கப் பெற்றவர், பல வகையான பந்து விளையாட்டுக் கழகங்களின் தலைவர், புலவரைப் புரக்கும் புனிதர், சென்னைச் சட்டசபை உறுப்பினர், திருவாளர் A. Y. S. பரிசுத்த நாடார் அவர்கள் இராவு சாகிபு பட்டம் அளிக்கப் பெற்றுள்ளமை எமக்குப் பெருமகிழ்ச்சி தருகின்றது.

திருநெல்வேலி, மதுரை திரவியம் தாயுமானவர் இந்துக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியரும், ஆராய்ச்சித்துறைத் தலைவருமாகும் திரு. K. அருணுசலக் கவுண்டர் அவர்களும், எட்டயபுரம் உயர்நிலைப் பள்ளியில் தமிழ்ப் பணி புரிந்து வரும் திருவாளர் குருசாமி தீட்சதர் அவர்களும் இராவு சாகிபு பட்டம் பெற்றிருப்பது கருசி தமிழறிஞரும், தமிழாசிரியரும் தாம தாம் பெற்ற பெருமையாகக்கொண்டு மகிழற்பாலர். இப் பாராட்டுக்கள் தமிழுலகத்திற்குத் தனிப்பெருமை தருகின்றது. புறக்கணிக்கப்படும் தமிழ்வாணரும் பாராட்டப் பெறும் நற்காலம் தோன்றி வருகின்றது என்போம். இத் தோற்றம் கண்டு மகிழ்கின்றோம்.

திரு. அருணுசலக் கவுண்டர் அவர்கள் இரண்டாந்தரப் பள்ளியிறுதித் தேர்வில ஆங்கிலத்தில் நம வளநாட்டு முதல்வராகத் தேர்ச்சியுற்றார். இவர்கள் திறத்தையறிந்த பேரறிஞர் திரு. உ. வே. சாமிநாதையர் அவர்கள் இவர்களைச் சிதம்பரம் மீனுட்சி தமிழ்க் கல்லூரியில் மாணவராகச் சேர்த்துத் தமிழ் படிக்குமபடிச் செய்தார்கள. இவர்கள் மாணவராக விருந்து கல்வி பயின்றார் பலர். ஆய்வு முடிந்ததும், திருநெல்வேலிக் கல்லூரியில் இருந்து தமிழ்ப்பணி புரிந்து வருகின்றார்கள்.

திரு. குருசாமி தீட்சதர் அவர்கள் சிறந்த தமிழ்ப் புலவர் வரிசையில் வைத்துப் பாராட்டும் தகுதியுடையவர்கள்.

இவர்களை நாம் பாராட்டி மகிழ்வதுடன், ஏனைய தமிழாசிரியரும் பின்னாட்களில் பட்டங்கள் வழங்கப்பெற்றுத் திகழ்வதைப் பார்த்து மகிழ யாம் விழைகின்றோம்.

நம் சங்க அன்பரும், அண்ணுமலைப் பல்கலைக் கழகப் பேரா சிரியரும், வரலாற்று ஆராய்ச்சித் துறையில் பேர் பெற்றவரும், நவில்தொறும் நூல் நயம் காணும் வல்லுநரும், நூல் நயம் கண்டும் ஏடு கைவிடாத திறத்தினரும் ஆகிய நம் சங்க உறுப்பினர் இராவு பகதூர் திரு. C. S. சீனிவாசாச்சாரியார் அவர்கள் திவான் பகதூர் ஆகியிருக்கிருர்கள்.

அண்ணுமலைப் பல்கலைக் கழகப் பதிவாளர் திரு. நா. விசுவ நாதையர் அவர்களின் அறிவாற்றலையும், செயலாற்றலையும் பாராட்டு வதற் கறிகுறியாக இவர்கட்கு இராவு பகதூர் பட்டம் தந்துள் ளார்கள்.

இவ்விருவருக்கும் எம் மகிழ்ச்சியையும் பாராட்டையும் தெரிவிக் கின்ருேம்.

தகுதியுடைய ஏனைய தமிழன்பர்களும், ஆசிரியர்களும் பிறரும் வருங்காலத்தில் பாராட்டப் பெறுவார்கள் என்று கருதுகின்ருேம்.

## கரந்தைப் புலவர் கல்லூரி.

### சென்னைப் பல்கலைக் கழகத்து வித்துவான் நிறைவுத் தேர்வில் வெற்றிபெற்ற மாணவர்கள்.

| | | |
|---|---|---|
| 1. | N. இராமநாதன் | முதல் தரம் |
| 2. | A. M. பரிமணம் | ,, |
| 3. | K. மாயாண்டி | ,, |
| 4. | K. கோதண்டபாணி | இரண்டாம் தரம் |
| 5. | S. பண்டரிநாதன் | மூன்ரும் தரம் |
| 6. | K. B. அழகர்சாமி | ,, |
| 7. | P. சுப்பையன் | ,, |
| 8. | M. சுந்தரேசன் | ,, |
| 9. | G. சதாநந்தம் | ,, |
| 10. | M. கிருட்டினசாமி | ,, |

# கரந்தைப் புலவர் கல்லூரி.

## சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வு முடிபு.

| | அனுப்பப்பெற்றவர். | | வெற்றிபெற்றவ . | வெற்றி அளவு % |
|---|---|---|---|---|
| | | புகுமுகத் தேர்வு | | |
| 1945 | 8 | | 7 | 88% |
| 1946 | 7 | | 6 | 86% |
| | | தொடக்கத் தேர்வு. | | |
| 1945 | 13 | | 9 | 69% |
| 1946 | 12 | | 10 | 83% |
| | | முடிவுத் தேர்வு | | |
| 1945 | 6 | I—1<br>II—2<br>III—2 | 5 | 83% |
| 1946 | 13 | I—3<br>II—1<br>III—6 | 10 | 77% |

## பாரி மகளிர்.

திருவாட்டி. மே. மாசில்லாமணி அம்மையார் M.A., L.T., அவர்கள
பெண்கள் கிறித்தவக் கல்லூரி, சென்னை.

(முற்றொடர்ச்சி: துணர் உஉ, மலர் உ, பக்கம் 52)

### Act IV Sc. II

இடம் :- நந்தவனம்.

பாத்திரங்கள் :- அங்கவை, சங்கவை, தோழிமரர்.

**அங்கவை :-** வருவீர் பெண்காள்! வண்டருச் சோலையில்
திருவும் மணமும் திகழுமிப் பொழுதில்
கழலம் மானையாம் களியாட் டுடனே
கழிப்போம் மாலையைக் களிப்புடன் கூடி.

**கண்ணகி :-** முடிப்போம் மருமலர் தொடுப்போம் மாலை

**மாதவி :-** தண்ணிய சுனைநீர் தாவி யெழுந்திடத்
துண்ணெனக் குதித்துத் துாநீ ராடுவோம்

**கற்பகம் :-** தருக்களில் நிரம்பிய உருத்திகழ் கனிகளை
கருவியால் உதிர்க்குவாம் அருவிநீர் அருந்துவோம்
(சங்கவை தனித்து ஓரிடம் நிற்பதைக் கண்டு)

**அருந்ததி :-** கண்ணே! சங்கவை கலந்துடன் ஆடா
தென்னே மறந்திங் கிருந்தாய் தனியே!

**சங்கவை :-** மறந்தேன் உங்களை; மனமாம் வாகனம்
விரைந்தே சென்றது, விதவிதப் பொருள்மேல்

**அருந்ததி :-** என்னுடன் வருவாய் எம்முடன் சேர்வாய்
துன்னுவோம் ஏனைய தோழியர் மாட்டு

**சங்கவை :-** யாவரோ இவ்விடம் தீவிர மாக
ஓடியே வருவர் ஒண்டொடி பாராய்!

**அருந்ததி :-** காரணம் யாதோ தீவிரத் திற்கு?

(தோழி வருகிருள்)

**சங்கவை :-** என்அருந் தந்தைக் கேதம் வந்ததோ
பன்னரும் பாவலர்க் கின்னல் வந்ததோ
தோழிநீ இவ்விடம் துக்கக் குறியுடன்
துன்னிய தெவனோ துண்ணென அறைவாய்

**கற்பகம் :-** ஒன்றும் ஒளியா துண்மையை அறைவாய்
நன்றே யெனினும் அன்றே யெனினும்
கவலா துரைப்பாய் அவலங் கொள்ளேல்

**கண்ணகி :-** சித்திரப் பாவைபோல் இத்திறம் நின்ருள்
உத்தரம் ஒன்றும் உரைத்திலள் ஏனோ?

மாதவி :- கூறுவாய் தோழி ! தேறுவாய் உள்ளம்
விளைந்தது யாது விளம்புதி யழாது

தோழி :- இப்பெரு துயரை எப்படிக் கூறுவேன் ?

அங்கவை :- புத்தியாம் அருங்கலம் புனைந்திடும் மடவார்
எத்தகைத் துன்பமும் எல்லாத் தொல்லையும்
இடையிடு ஊறும எல்லையில் தளர்ச்சியும்
தடையெனக் கொள்ளார் தயக்கம் கொள்ளார்
அமர்வாய் தோழி, அஞ்சா நெஞ்சுடன்
அரண்மனை நிகழ்ச்சியை அறைவாய் எமக்கே.

தோழி :- ஐயகோ ஐயகோ எங்ஙனம் புகலவேன்
நாவெழ வில்லை நாவெழ வில்லை
எங்ஙனம புகலவேன், எங்ஙனம் புகல்வேன் !

சங்கவை :- அஞ்சா நெஞ்சுடன் அறைவாய் தோழி !

தோழி :- வஞ்சகர், துட்டர், வசையுறு பொய்யர்,
அஞ்சா நெஞ்சினர், அரக்கர்தீ வினையர்
விதியோ வஞ்சமோ வினையோ விளைவோ
எதுவென் றறியேன ஏழையென் புகல்வேன்
சொல்லுவ தெங்ஙன சொலலொணு மொழியை !

அங்கவை :- எத்தகைச் செய்தியா யிருப்பினும் புகல்வாய்
நிச்சயம் பொறுப்போம, நிகழ்ந்ததை அறைவாய் !

தோழி :- இன்னது கூறவோ என்வாய் இருந்தது ?
ஐயகோ கெட்டேன் அழிந்தேன் இன்று
காவலன் பாரி

சங்கவை :- கலங்கா துரைப்பாய்.
மேவிய தியாது ! மின்னிடை பகர்வாய்

தோழி :- பரிசிலர் யாமெனப் பணிந்து வணங்கித்
தரியலர் மூவர் தகைமை யிழந்து,
'உன்னையே அளி.'யென உரைத்தனர், அவர்க்குத்
தன்னையே கொடையாத் தந்தான் பாரி
எல்லையில் புகழை இமமையில் நிறுவி
ஒல்லையிற் சென்ருன் ஒளிதிகழ் விண்ணகர்.

(அங்கவை, சங்கவை, மூர்ச்சித்துக் கீழே விழுந்து எழுந்து)

அங்கவை :- பரிசிலர்க்குப் பரிந்தளித்தாய் பாரியெனும் நாமம்
[கொண்டாய்
துரிசில்மன விளக்காலே துன்பம்பல துடைத்து
[நின்ருய்
அரிதாம்பல அறமுடனே ஆதரங்கள் அளித்துச்
[சென்ருய்
குரிசிலேநற் கோமகனே கோதையர்தம் குறைகே
[ளாயோ ?

கற்பகம் :- எங்ஙனம் தேற்றுவம்! எங்ஙனம் ஆற்றுவம்?
மாதவி :- கபிலர் எங்குளர்?
அருந்ததி :- கபிலர் தேற்றுவர்.
(பிதற்றி அழுது)
அங்கவை :- பெண்ணாகப் பிறந்திட்டோம் பெருங் குற்றம் இழைத் [திட்டோம்
மண்ணுலக மிதன்மீதில் மறுக்க முற்றுக் கலங்கி
விண்ணவர்க்கு விருந்தூட்ட விரைந்தேநீ [நின்றோம் [சென்றனையோ
மண்மீதில் தந்தை யுனைப் பிரிந் தெங்ஙன் வாழ்வோமே.
கற்பகம் :- கண்ணகி! பாராய் கண்ணீர் கலுழ
மண்ணிலம் தோய்ந்து மாசுகொள் துகளில்
மதிமுகம் வதங்க மங்கை சங்கவை
விதியென் றறியாள், விம்மியே கிடப்பள்
கண்ணகி :- அன்னை சங்கவை! அலமரல், அலமரல்.
சங்கவை :- தந்தையயே எம் தந்தையேநீ தவறொன்றும் இழைத் [திலேயே
எந்தையேஎம் அகம்துறந்து, ஏகினையே எமையும் [விட்டு
உன்றன் திரு முகங்கண் டென் றுவகையுடன் [களிப்பதையோ
சென்றனையோ சென்றனையோ, சிறியேமை [மறந்தனையோ?
அருந்ததி :- விதியை யாரே வெல்லுவர் உலகில்?
மதியை வெல்லும் விதிதான் வலிதே
சங்கவை அலமரல்; மங்கைநீ தேறுவாய்.
சங்கவை :- தந்தையே யாம, தவித்து நின்றோம், தயங்கினோம் யாம் [தளர்வு முற்றோம்
அந்தந்தோவிவ் விதியைநொந்து அலமந்துயாம வாடி [நின்றோம்.
வந்தனன்பாழ் யமனும் தூதன் வலியன்தான் அவனே [என்றும்
அந்தகனே அவன்அறியான், அழித்தனன்நற் புகழை [இன்றே.
தோழியர் :- அங்கவையே சங்கவையே, அன்புநிறை அன்னையரே
எங்கள்தம் நற் றவத்தால்வந் தெமமிடை [தோன்றினிரே,
மங்கையரே மயக்கம் தீர்ப்பீர், மாயமே கொல் [வஞ்சனையோ
இங்கொன்றும், அறிந்திலமே, ஏநதிழையீர் எங் [குறுவாம்.

தொடர்ச்சி பக்கம் 78.

---

பிழை திருத்தம்: பக்கம் 78.

| பிழை | திருத்தம் |
|---|---|
| (முற்றொடர்ச்சி : துணர் 22, மலர் 2, பக்கம் 52) | (முற்றொடர்ச்சி: பக்கம் 72) |
| Act IV, Sc 1 | Act V, Sc 1. |

# துயரம்

தமிழ்த் தாயின் முதன்மை மைந்தர் களுள் ஒருவராகிய யாழ் நூலாசிரியர் அருட்டிரு. **சுவாமி விபுலாநந்த அடிகள்** இன்று காலை, கொழும்பு நகரில், உலக வாழ்வினை நீத்த செய்தி, தமிழுலகைத் துயர்க்கடலுள் ஆழ்த்துகின்றது.

20–7–1947,
ஞாயிறு.

அமைச்சர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

# சாசனங்கண்ட தமிழ்

திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி. எ., பி. எல்., அவர்கள்

(முற்றொடர்ச்சி: துணர் உஉ, மலர் உ, பக்கம் 63)

சாசனங்களின் காலவரையறைகளைக் கருதுங்கால், நமக்கு இது வரை கிடைத்துள்ள கல்வெட்டுக்களில் பல்லவர்களதே முந்தியதாம். 5—6-வது நூற்றாண்டு எனக் கூடியது திருநாதர்குன்றுக் கல்வெட்டாகும். 7-வது நூற்றாண்டில், மகேந்திர வர்மனது மகேந்திர வாடி, மாமண்டூர். சிராமலைக் குகை முதலியன, பின் வந்துள்ளன. பாண்டியர்களின் கல்வெட்டுக்களில், மாறன் சடையனது ஆனைமலைக் கல்வெட்டு, கி. பி. 769-ல் பொறித்தது. சோழர்களது, 9-வது நூற்றாண்டினதான விஜயாலய சோழனதாகும். செப்பேடுகளைக் கருதுங்கால், பரமேச்சுர பல்லவனது கூரம் செப்பேடுகளும், பாண்டியன் மாறன் சடையனது வேள்விக்குடிச் சாசனமும், [1] சோழன் சுந்தர சோழன் பராந்தகனது, அன்பில் செப்பேடுகளுமே [2] காலத்தால் முந்தியவை.

சாசனங்கள் என்ன லிபியில் பிறந்துள்ளன என்பதை ஆராயுங்கால், சேர, சோழ, பாண்டியர்கள் 10-ம் நூற்றாண்டு வரை வட்டெழுத்திலும், அதற்கு முந்திய பல்லவர்கள் கிரந்தத்திலும், தமிழிலும் பொறித்தனர். வட்டெழுத்து, காலத்தால் முந்திய தமிழ் லிபியே. 1800 ஆண்டுகட்கு முன்னர் சிலப்பதிகார காலத்தில் வழங்கிய லிபி வட்டெழுத்தே, இவை கண் போன்று வட்டமாக இருந்ததை ஆசிரியர் இளங்கோவடிகள் குறிக்கின்றார். செங்குட்டுவன் வீர பத்தினிக்குக் கல் கொணர வடநாட்டிற் கேகுகிறான். சகடங்களிலும் சாத்துக்களிலும் பல பொருள்கள் பின்போயின. அவைகள் 'கண்ணெழுத்துப் பொறித்து எண்ணு பலபொதி' என்கிறார். 9-வது நூற்றாண்டு வரை சேர, சோழ, பாண்டியர்களால் கையாளப்பட்ட வட்டெழுத்து முதலாவது ராஜ ராஜ சோழனால் 10-ம் நூற்றாண்டில் மாற்றப்பட்டது. இவை மாற்றப்பட வேண்டிய திருவுள்ளம் பற்றியது இன்றும் திருக்குற்றால நீர் வீழ்ச்சிக் கடுத்துக் கற்பாறையில் செதுக்கியுள்ள கல்வெட்டால் அறியலாகும். இதன் பின்னர் சேர பாண்டியர்களும் சோழனைப் பின் பற்றியே தம் சாசனங்களில் தமிழ் லிபியைக் கையாண்டனர்.

நமக்கு இது வரை கிடைத்துள்ளவையுள் செப்பேட்டுச் சாசனங்கள் சிலவே. கல் வெட்டுக்கள் பல. கல்வெட்டுக்கள் காலத்தால் சிதைவுறுதும், கள்ளரால் தீயால் கவரப்படாமலும், தஞ்சை இராஜ ராஜேசுரத்தில் காணப்படுபவை போன்று குன்றா இளமைதாங்கி மிளிர்வன, செப்பேடுகளோ, மானிட வாழ்விற்கு உட்பட்டும், மண்ணில் மறைந்தும் செம்பாக மாற்றப்பட்டும், வெளியூர் சென்றும் காணல் அரியனவாயின. ஆகையான் நமக்குக் கிடைப்பன அருமை.

1. Epi. Ind. VII, 16, 292. 2. Epi. Ind. V, 5, 44.

எனினும் கிடைத்தவை அருந்தனம் போன்று சரித்திரக் குறிப்பும், மக்கட் செய்தியும இலக்கியப் பண்பும் பொலிந்து விளங்குவது தமிழ் மக்கள் செய்த தவமே. இச்சாசனங்கள் முதற் பகுதியில் அரச பரம்பரை விளக்கமும் பிற் பகுதியில் தாம் விடுத்த கொடையின் திறங்களும் மிக விவரமாகத் தெரிவிப்பன. அவை 'கோள் ஓலை' யென்றும், 'கிராம சபையாருக்கு சக்கரவர்த்தி திருமுகம்' என்றும் 'சோழநாட்டு தென்கரை, நறையூர் நாட்டு நாட்டார் காண்க' என்றும், 'நிபந்தங்கள் இறையிலியாகத் தந்தோம். காணியும் இறை யிலியுமாக அநுபவிக்க', 'நம் ஆணைக்குரியவாறு குடியோடு குடிப் பேறும் விலைக்கு விற்று தாலத்திடுக' என்பவை போன்றும் உள்ள உத்தரவுகளைத் தாங்கின.

அரசனது உத்தரவை எவ்வாறு மேற்கொண்டவர் என்பதைத் திருவாலங்காட்டுச் செப்பேடு 1 ஒன்று விளக்குவது :— 'நாட்டோமுக்கு திருமுகம் வர, நாட்டோமும் திருமுகங் கண்டு, எதிர் எழுந்து சென்று தொழுது வாங்கி, தலைமேல் வைத்துப் பிடி சூழ்ந்து விருதுகள் மரியாதைகளுடன் உடன் வரவேற்றுக் கொணர்ந்து — ஊர் மண்டபத்தில் யாவருககும் வாசித்தும், அவைகளை நடைமுதலில் கடைப்பிடித்து பணிந்தனர்.

சாசனங்கள் பல்வேறு காரணங்களுக்காகப் போந்தன. பொதுவாக, அரசர்கள் கோயில்களுக்கும், மக்கள், கல்லூரி, மருத்துவ நிலையம், அறச்சாலை போன்ற தருமங்களுக்கு விட்ட அறங்களை உணர்த்தின. இன்னும் சிலஅரசியல் அறிக்கைகள்; உடன்படிக்கைகள் பல. உத்திரமேரூர் — மானூர் — சேய்ஞலூர் போன்ற ஊர்ச் சபைகளை அமைக்கும் உத்தரவுகள் சில. திருநாதர்குன்று அறிவிப்பு போன்று சமாதிக் கல்வெட்டுக்கள் பல. இங்கு ஜயினததுறவி யொருவர் 57 நாட்கள் உண்ணாவிரதமிருந்து சமாதியாயினரென்பது கண்டராதித்ததேவர் தேவியார் மாதேவடிகளான ஸ்ரீ செம்பியன் மாதேவியார் திருநல்லம் உடையார்க்கு திருக்கற்றளி எழுந்தருளுவித்து இத்திருக்கற்றளியிலே திருநல்லம் உடையாரைத் திருவடித் தொழு கின்றாராக எழுந்தருளவித்த ஸ்ரீ கண்டராதித்த தேவர் இவர் என்பது போன்ற படிமக் கல்வெட்டுகள் சில. 'உடையார் விஜய ராஜேந்திர சோழ தேவர் கலியாணபுரம் எறிந்து கொடு வந்த துவார பாலகர்' இதுவெனப்போந்த வெற்றி நிகழ்ச்சிகள் சில. 'திரிசிராமலை அந்தாதி' 'சமபந்தர் தேவாரப் பதிகம்' போன்றவையும் 'திருப்பாலைப் பந்தல் உலா' 'இறைசைப் புராணம்' 'ஓங்கு கோயிற் புராணம்' போன்ற நூல்களையும் 2 வெளியிட்டன சில. தஞ்சையில் 'திருவிக்கிரமன் திருவாசல்' தாராசுரம் 'ராஜ கம்பீர மண்டபம்' போனற கோயிற் பகுதிகளை அறிவுறுத்தின சில. இன்னும் சில, கோயில் அதிகாரி களுக்கும் தேவகன்மிகளுக்கும் அரசர் ஆணைகளை அறிவுறுத்தின.

கோயில் தானங்களையே அரசர் வெகுவாய்ப் போற்றினர். 'கோத் தொட்டு உண்ணற்பாலது எவ்வகைப்பட்டதும் கோக்கொள்ளாதே. இத்தேவரே கொள்ளப்பெறுவதாகவும் என்பது அரசியலில் வாங்க வேண்டிய வரிகள் யாவும் கோயிற் தேவரே பெறுக என்பதை

1 Epi. An. Rep. 1906. 2 செந்தமிழ் 43, 1-2; 18.

உணர்த்தும். இத்தருமங்களை நிறுவியது ஒரு பங்கிருக்க அவை எக்காலமும் நடைபெற வேண்டுமென்ற கவலையே பெரிதாமென்பது சில கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது. வடக்கே மைசூர் வரையும் தெற்கே குமரி வரையும், மேற்கே திருவிதாங்கூரிலும் காணப்படும் தமிழ்ச் சாசனங்களிற் சிலவற்றுள் ஒரு அரிய வெண்பா காணப் பெறுகிறது. அது 'சண்டீச்சுரன் ஓலை தாவரம் சூழ் வையகத்து, கண்டு ஈச்சுரன் கருமம் ஆராய்மின்-பண்டே, அறஞ் செய்தான் செய்தான் அறங்காப்பான் பாதம், திறம்பாமல் சென்னிமேல் வைத்து' என்பதாம். சிவபெருமானது தரும பரிபாலன கர்த்தா-சண்டீச்சுரது திருமுகம். அறஞ் செய்தவர் பின்னர் அதனைக் காப்பவர்களுடைய பாதங்களைத் தம் தலை மீது வைத்து இதனைச் செய்தார் என்பது இதன் கருத்து.

7-வது நூற்றுண்டில் பல்லவன் வாதாபி கொண்ட நரசிம்ம போத்தரையன் திருக்கழுக்குன்றத்து ஸ்ரீ மலைமேல் மூலத்தானத்து பெருமானடிகளுக்கு வழிபாட்டுப்புறமாக (தேவதானமாக) இறையிலி நிலம் அளித்தான். அதனை 9-ம் நூற்றுண்டில் ஆதித்த சோழன் 'பூர்வராஜாக்கள் வைத்தபடியே வைத்தேன்-இராஜகேசரி வர்மனேன். இத்தர்மம் ரக்ஷித்தான் அடி, என் தலைமேலின'* எனத் தன்னுட்சியில் போற்றிப் புரந்து வந்தமை அறியத்தக்கது. இவை போன்றன பலவுள. 'இத்தர்மம ரக்ஷிக்கின்ற மகாசபையார் ஸ்ரீ பாதங்கள் என் தலை மேலன,' 'இது கண்டு காப்பார் அடி, என் தலை மேலன. அற மறவேல், அறமல்ல துணையல்ல' 'அறம் மறவற்க. அறமல்லது துணையில்லை' என வருந் தொடர்கள் அறத்தைப் பின் வருவார் அழியாது பாதுகாத்தல் வேண்டுமென்பதைப் புலப்படுத்துவன. காலஞ் செல்லச்செல்ல இவ்வேண்டுகோள் மிக்க கடுமையாகக்கூற வேண்டிய நிலையையும் யடைந்துள்ளது. 'இத்தருமத்திற்குக் கெடுதி நினைத்தவர் கங்கைக்கரையில் ஆயிரம கபிலைப் பசுவைக் கொன்றவன் பாவம் கொள்ளக்கடவர்' என்றும், 'இத்தருமத்திற்குத் தீங்கு நின்றுர் காக்கையு நாயுமாவர்' என்றும், 'இதுக்கு அழிவு செய்வான் வர்க்கம் அறுவான்' என்றும், 'இதுக்கு அஹிதம நினைப்பான் வழியறுவான்' என்றும் சாசனங்களின் இறுதியிற் கூறப்பட்டிருப்பன, அறப் பாது காவலிற் பின்னுள்ளோர் வழுவினமை காரணமாக ஏற்பட்ட கடு மொழிகளேயாம்.

சாசனங்களில் தனித் தமிழ்ப் பண்புகள் மலிந்துள. அக்கால உலக வழக்கிற் கிணங்க சில மூர்த்திகளின் பெயரும் தூய தமிழ்ப் பெயராகக் காணப்படுவன. தக்ஷணமூர்த்தி 'ஆலமர் செல்வன' அறமுரைத்த நாயனுர் எனவும், மாாக்க சகாயர் வழித்துணை நாதர் எனவும், அர்த்த நரீசுரர்-மடந்தை பாகர், மங்கை பாகர் எனவும், நடராஜர் கூத்தாடும் தேவர் கூத்தாடும் நாயனுர்-கூத்தப்பிரான் எனவும், அந்நாளில் வழங்கியமை இதனை வலியுறுத்தும. நூற்றுக் கணக்கான சாசனங்கண்ட தமிழிலே. ஓரிடத்தேனும 'நடராஜர்' என்ற பெயர் இல்லை யென்பது வியப்பைத தருவதொன்றுகும். மக்கள்

* Epi. Ind. III, 38, 279.

பெயரும் தூய தமிழில் அந்நாளில் வழங்கி யுள்ளன. கல்வெட்டுக்களிற் காணப்படும் அரவணையான் புகழ்வேண்டி, கலங்காச்சுடர், கவராமொழி, குடிதாங்கி, எடுத்த திருவடி, செய்யதிருவடி, ஆடவல்லான், சீர் இளங்கோ, ஆளப்பிறந்தான், ஆனைமேலழகியான் என்னும் இயற்பெயர்கள் தூய தமிழ்ப் பெயர்களேயாம். ஊர்ப் பெயர்களும் திருத்தமான தமிழில் வழங்கியுள்ளன. அம்பகரத்தூர்-அம்பல் புறத்தூர் எனவும், திருவழுந்தூர்-திரு இந்தளூர் எனவும், தாராசுரம், இராச ராசபுரம் எனவும், செந்தலை-சந்திர லேகை சதுர்வேதி மங்கலம் எனவும், தலைநாயர், தனிநாயக சதுர்வேதிமங்கலம் எனவும் அந்நாளில் வழங்கி யுள்ளன.

மற்றும் சில சொற்றொடர்களும் தனித் தமிழ்ச் சிறப்பின. அவற்றுட் சில பின் வருமாறு. 'அறவோலை செய்து கொடுத்தோம்,' 'கோயில் விளக்கு எரிப்பதற்காக நெய் உதவிய சாவா மூவாப் பேராடு தொண்ணூறு' 'மேனோக்கிய மரமும் கீழ் நோக்கிய கிணறும்,* 'கமுகும தெங்கும் உள்ளிட்ட பல்லுருவில் பழமரங்களும்' 'நிலமும் ஞாயிறும் உள்ள துணையும்' என்பன காண்க

திருக்கோவலூர்ச் சிறப்பை முதல் இராசராசன் கல்வெட்டொன்றில் காணலாம். அப்பகுதி 'புனர் வளர் பேரட்டான வீரட்டானம், நினைப்பினும் அனைத்தினும் அனுதி யாயது உணர்தற்கரியது யோகிகள் உள்ளது-புணர்தற் கினியது பொய்கைக் கரையது-சந்தன வனத்தது சண்பகக் கானது, நந்தன வனத்தின் நடுவது' என்பது. 14-வது நூற்றுண்டின் சரித்திரப் பகுதி பற்றிய கல்வெட்டொன்று மாலிக் காபூர் படையெழுச்சியினுல் நாடு அடைந்த துன்பத்தை விளக்குகிறது.

'முந்நாள் ராஜ ராஜ சுந்தர பாண்டிய தேவர் துலுக்கருடன் வந்த நாளிலே-ஒக்கூருடையாரும், இவருடைய தம்பிமாரும், அனைவரும், அடியாரும், செத்துங் கெட்டும் போய் அலைந்து, ஊரும் வெள்ளத்தாலும், கலகத்தாலும் பாளாயிருக்கிற அளவிலே' என வருந்தொடர்களால் இவ்வுண்மை உணரலாம்' இன்னுென்று செவ்விய முறையில் போரில் நாடு கைக்கொண்டமை உணர்த்துவது :- 'வேண்டுவன வெல்லாம் குறைவறச் செய்து, பரிகரித்து, பலத்தாலும், அர்த்தத்தாலும், உற்சாகத்தாலும் பாண்டி நாடு கைக்கொண்டு' என்பதாகும்.

இன்னும் சில சாசனப்பகுதிகள் பன்னூற்றுக் கணக்கான ஆண்டுகளில் தமிழின் உலக வழக்கு அழியாது, பண்பும் வனப்பும், வளப்பமும் பொருந்தியிருப்பதற்குச் சான்ருகும். இற்றைக்கு 1200 ஆண்டுகளுக்கு முந்திய வேள்விக்குடிச் சாசனத்தில்,

'நாக மாமலர்ச்சோலை நளிர்சி னைமிசை வண்டலம்பும், பாகனூர்க்கூற் றமென்னும் பழனக் கிடக்கை நீர்நாட்டு' என்பது நாட்டு வருணனை. இன்னும்,

'பூவிரியும் பொழிற்சோலைக் காவிரியைக் கடந்திட்டு'............ ஈண்டொளிய மணியிமைக்கு மெழிலமைந்த நெடும்புரிசைப் பாண்டிக் கொடுமுடி சென்றெய்திப் பசுபதியது பதும பாதம் பணிந்தேத்தி' என்பது, பாண்டியன் கொடுமுடி ஈசனை தரிசித்த வரலாருகும்.

* Ind. 96 of 1892; S. I. I. VI, 375

1000 ஆண்டுகட்கு முன்னதான சின்னமனூர்ச் செப்பேடுகள் பாண்டியர் மரபு சந்திர குலம் எனச் சந்திரனை மேன்மைப் படுத்துவது 'திருவொடுந் தெள்ளமிர்தத்தொடுஞ் செங்கதிரொளிக் கௌஸ்துபத் தொடும் அருவிமதகளி றென்றொடுந் தோன்றியான் அவிர்சடைமுடி வீற்றிருந்த வெண் திங்கள்' என்பது;

'தொள்ளாயிரம் ஆண்டுகட்கு முந்திய பராந்தக பாண்டியன் மெய்க் கீர்த்தியொன்று, திருவளரச் செயம் வளரத் தென்னவர்தம் குலம் வளர, அருமறை நான் கலைவளர வனைத்துலகுந் துயர்நீங்கத், தென் மதுராபுரித் தோன்றித் தேவேந்திரனொடினிதிருந்த, மன்னர் பிரான் வழுதியர்கோன்' என்றும்,

இற்றைக்கு 700 ஆண்டுகட்கு முன்னதான இரண்டாம் ராஜ ராஜ சோழனின் மெய்க் கீர்த்தி யொன்றில் 'அதியுகங் கொழுந்து விட்டுத் தழைத்தோங்கக் கோடாது அறம் குளிர் தூங்க, மாரி வாய்த்து வளஞ் சுரக்க, தரணியோர் பிணி நீங்க, நல்லோர் தங்கற் புயர, நான்மறையோர் தொழில்வளர, எல்லாரும் தனித்தனியே வாழ்ந்தன மென மனமகிழ்ந்து ஒருவருடன் ஒருவர்க்கும், ஒன்றினுடன் ஒன்றுக்கும் வெருவரு பகைமை மனத்தின்றி, விழைந்து காதலுடன் சேர' என்றும்,

இவன் காக்கும் திருநாட்டில் 'இயல் புவிதுவென நின்று காவல் நெறிபூண்டும், அன்றியல்லது நினையாது தந்தையிலோர்க்குத் தந்தை யாகியும் தாயிலோர்க்குத் தாயாகியும் மைந்தரிலோர்க்கு மைந்த ராகியும், மன்னுயிர்கட்குயிராகியும், விழிபெற்ற பயனென்ன, அமையப்பெற்ற அருளெனவும்,............முத்தமிழுக்கு தலைவனென வும், மூன்றுலகின் முதல் தெய்வமெனவும் புகழ் என்னும் நிலாப் பரப்பி' என்றும் பொறிக்கப்பெற்றுள்ளன.

பல்லவர்களது முதலாவதானது கூரம் செப்பேடு.

இச்சாசனம் பிறந்து 1250 ஆண்டுகளாயினும் அந்தக் காலத் தமிழிற்கும் இந்தக் காலத் தமிழிற்கும் எள்ளளவேனும் வேற்றுமை இல்லை. ஆங்கில முதலிய ஐரோப்பிய மொழிகள் இத்தகையன அல்ல. 1250 வருஷங்களுக்கு முன் இருந்த ஆங்கிலமானது புது மொழியைப்போல் கற்காதவர்களுக்குக் கொஞ்சமேனும் புலப் படாது. ஐரோப்பிய மொழிகள் நாளடைவில் மாறிக்கொண்டே யிருக்கும். தமிழோ அவ்வாறன்று. கி. பி. 650-ல் வழங்கின தமிழினது இலக்கண முறையாவது பேச்சு நடையாவது இப்போது வரையில் மாறவில்லை' என்பார் ஒரு பேரறிஞர். இனியும் அவர் கூறுவார் 'இத்துணைக்காலம் கெடாதிருந்த தமிழைப் பாதுகாத்து சிறுத்துவது நமக்கு முதற்கடமையல்லவா? தமிழ்மாது மீது அன்பு எவருள்ளத்தினின்றும் நழுவி விடாது இருக்குமாக' என்பார்.

இவையனைத்தும், தமிழ் மொழியின் அழியா இளமைத் தன்மை யையும், உலக வழக்கிலும் அது சிறிதும் மாற்ற மடையாமல் தனது சீர் இனிமையையும் வளப்பத்தையுந் தாங்கி இருக்கின்ற நிலையையும், தமிழ் இலக்கியங்களும சாசனங்களும்-சிறப்பனைத்தும் உணர்ந்து கொள்வதற்கு ஒன்றுக்கொன்று துணைபுரிவதனையும் நன்கு உணரலாம்.

# பாரி மகளிர்.

திருவாட்டி. மே. மாசில்லாமணி அம்மையார் M.A., L.T., அவர்கள்
பெண்கள் கிறித்தவக் கல்லூரி, சென்னை.

(முற்றொடர்ச்சி: துணர் உஉ, மலர் உ, பக்கம் 52)

Act. IV. Sc. I.

இடம் :— அரண்மனையின் ஒரு புறம்.
பாத்திரம் :— கபிலர்.

(தனிமொழி)

**கபிலர் :-**
மன்பதை தழைக்க மாநிலங் காத்த
மன்னனும் பாரி மறைந்தனன் அந்தோ !
மக்களிவ் வின்னலில் மயங்கிக் கலங்கித்
திக்கெலாந் தவிக்குந் திறந்தான் என்னே !
அங்கவை சங்கவை அலக்க ணுற்றுத
தங்கு மில்லமும் தமக்கொன் றற்றுத்
தந்தையை நினைந்து சிந்தையும நொந்து
தவித்திடும் தயங்கிடும் தன்மையும் இதுவோ !
வள்ளலாம் பாரி வாழா தியானும்
கொள்ளேன் புகழும் கொடுப்பேன் உயிரை
உழுவ லன்புடன் தழுவும் நண்பனே
எழுபிறப் பாலும் தொழுவது கடனே
உத்தம நண்பனே உண்மை அரணிடம்
உலகினி லவனுக் கொப்பு முண்டோ ?
உத்தம நண்பனே உண்மைத் துணைவன்
நித்தமும் அவனே நன்னெறி கூறுவன்.
அந்தோ இழந்தேன் அத்தகை நண்பனை
பாரியே பாரியே பார்புகழ் பாரியே
கேளாய் கேளாய் என் துயர் கேளாய்
எனை நீ நீங்கி எங்கே ஏகினுய் ?
உனையான் நீங்கி உயிர்வாழ் வேனே ?
ஏனே கொடுமை இழைத்தனை எனக்கும்
தானே நானும் தவிர்ப்பன் உயிரை
ஆருயிர் நண்ப அடைவன் உன்னை
தேரு தென்மனம் தெருளா தென்னுளம்
இன்றே என்னுயிர் உன்றனை நாடும
இன்றே என்மனம் உன்மனம் நாடும்
இன்றே வருவன் பொன்றுப் புகழினய் !

**வானொலி :-**
உயிரை மாய்க்க உளத்தில் நினைத்தனை
அயிர்த்தனை போலும் அன்புடை நண்பன்
செயற்கருஞ் செயலை

**கபிலர் :-** செயற்கருஞ் செயலெது ?

**வானொலி :-** பாரி மகளிரைப் பார்த்திபர்க் களித்துப்
பாரினில் அவர்புகழ் பரவச் செய்தல்.

**கபிலன் :-** புன்மொழி கூறினன் புகல்வ தறியேன்
என்யான் நினைந்தேன் யாதுமோ ராது
மன்னனும் பாரியை மனத்திற் கொண்டு
மடிவது ஐயோ மாண்பிலாச் செயலே
மகளிர்க் குரிய மணவினைக் கடனைச்
செய்யா தேகினன் பொய்யாப் பாரி
செய்வேன் அவ்வினை உய்வேன் நானே.

## Act. V. Sc. II.

**இடம் :—** அரண்மனையின் ஒரு புறம்.

**பாத்திரங்கள் :—** அங்கவை, சங்கவை, பாரி.

**அங்கவை :-** பண்புறு தந்தாய்! பற்றினேம் உன்னை
அந்தோ அகன்றான் அந்தோ சென்றான்
எந்தை மறைந்தான், எங்கோ சென்றான்
எங்ஙனம் பொறுப்போம், இவ்வருந் துயரை
எங்ஙனம் மறப்போம், இவ்வரும பிரிவை
வீய்ந்தோம் யாமும், வினைவோ இதுவும் ?
ஆய்ந்தால் எம்உயிர் அழிதல் நலமே

**சங்கவை :-** பெண்கள் நாங்கள் பிதற்றி நின்றேம் ?
மண்ணில் இனியெம் வாழ்வுதான் என்னே !
தந்தைதா யற்றுத் தவித்தியாம நின்றேம
நிந்தைக் குரியம், நிந்தைக் குரியம்.

**கபிலர் :-** என்னரும் மக்காள் இன்னல் துடைப்பீர்
பிறத்தலும், இறத்தலும், பிரிதலும், சேர்தலும்
நினைத்தலும், மறத்தலும, நீர்மையாய்க் கொண்டது
வினைநிறை யுலகம்; அனைய தாகையால்
உம் துயர் நீக்குவீர், நமநிலை யறிந்த
பரமபொருட் கடவுள் நலமெனக் கருதும்
அறம்தரு வினையே அளிப்பர் நமக்கும்.
பாரியாம வள்ளல் பாரினில் இலைதான்
எனினும் அவன்புகழ் என்றும் அழியுமோ ?
அழியாப் புகழை அடைந்தான் பாரி!
ஒழியாப் புகழை உடையான் பாரி!
உலகமே அழியினும் உலப்பிலான் பாரி!
அன்ன தந்தையை அருமபெரும் குணததீர் !
மன்னு தவத்தால் மகிழ்வுடன் பெற்றீர் !
களைவீர் துயரம், இளையீர் நீவிர்
விண்ணவர்க் காகும் விருந்தெனப் பாரி
மண்ணகம் நீத்து மறுமை சென்றனன்.

சங்கவை :- எந்தாய் இங்ஙனம் யாதோ புகன்றாய்
தந்தை யற்றுத் தவிக்கும் எங்கள்
நிலையை யறியாய்.

கபிலர் :- நிலையை யறிவேன்.
பாரியை யிழந்தீர்; பாரினில் நுமக்குத்
தந்தை யானே; தயக்கம் தீர்ப்பேன்.
உத்தம நண்பனின் உயர்தொழில் இதுவே
சத்தியம் உங்களைப் பத்திரம் காத்து
எத்திறத் தானும் ஏற்ற மணவினை
யானே முடிப்பன், என்கடன் அதுவே.
பாரிக் குரிய பண்பிலே னாயினும்
கூரிய மதியீர் ! குணம்நிறை மக்காள் !
எனையே தந்தையாய் ஏற்பீ ராயின்,
எனக்கும் எல்லையில் இன்பம் பிறக்கும்;
நண்பனை இழந்த நலமிலா வாழ்வின்
துன்பினைத் துடைக்கும் துயர்தனை நீக்கும்.

சங்கவை :- ஆன்ற நற்புலவ ! அன்புறு தந்தை !
அடைந்தோம் உம்மை அன்புறும் உளத்தொடு
துடைப்போம் கண்ணீர் துயரெலாம் களைவோம்.
உம்மைத் தந்தையாய் உடைய எமக்கு
அம்ம ! எத்தனை அளவிலா இன்பம்.

அங்கவை :- மெய்யே கூறினேன் வையக மிதிலே
மறுமுறை பெற்றோம் மன்னனும் பாரியை
மறுக்கம் தீர்த்த மதிநிறை புலவ !
கொண்டோம் உவகை கொண்டோம் புத்துயிர்.

கபிலர் :- என்னரும் மக்காள் என்கடன் கூறுவன்
திருமணம் பெற்றிடும் ஒருநிலை யடைந்தீர்
தருக்களைச் சுற்றிடும் மருக்கொடி; அன்றோ ?
பூங்கொடி யீர்சீர் பொருந்து தருவைத்
தீங்கறச் சுற்றிடப் பாங்குற அமைப்பன்
நாளையே அகல்வோம் நளிபறம் பினையே
மீளோம் இவ்விடம், தாழோம் இவணே.

## Act. IV. Sc. III.

இடம் :— கானகத்தை யடுத்த ஊர்

பாத்திரங்கள் :— அங்கவை, சங்கவை, கபிலர்.

கபிலர் :- ஆறுசெல் வருத்தம் மாறிட இவண்நாம்
ஓரிராத் தங்கி ஒழிப்போம் களைப்பை
காரிருள் எங்கும் கவிந்தது பாரீர்
ஊரிலோர் இல்லம் உங்கட் களிப்போர்
யாரென வினவிச் சீருடன் அவர்பால்
தங்கியே செல்வோம், நங்கையீர் கேண்மின்.

சங்கவை :- அந்தோ அந்தணீர்க் களித்தோம் கவலே!
தந்தையுந் தாயுந் தவிர்ந்த நாங்கள்
உய்ந்து மென்பயன் ஒழிந்து மென்பயன்
உயிரால் என்பயன் உடலால் என்பயன் ?
துயரும் துன்பமும் துக்கமும் நிறைந்துளேம்
சாதலே நன்று போதலே நன்று.

கபிலர் :- அன்புடை மக்காள் ! அவலம் தீர்ப்பீர்
மன்னன் பாரியின் மக்கள் நீவிர்.
முல்லைக்குத் தேரையும் மூவர்க்குத் தன்னையும்
எல்லையில் உவகையால் எழில்பெற ஈந்து
பாரினிற் புகழைப் பரப்பிய பாரியின்
சீர்தனை நீவிர் தெரிக்கும் செம்மையர்.
கன்றும் கனிதனை நன்றே உதவும் ?
கன்றெனில் நீவிர் கனிதனை ஈந்து
தந்தையர் பெயர்இவண் தழைக்கச் செய்வீர்.

அங்கவை :- ஆண்டகை நின்கருத் தறிந்தோம் அறிந்தோம்.
ஆழிசூ ழுலகினில் அவன்பெயர் நிறுத்துதல்
ஏழையர்க் குரியது யாமதை யறிந்தோம்.
மற்று மொருமொழி மதிவலாய் கேளாய்
உற்றுயி ருள்ளோர் உயர்தொழில செய்வார்
உயிரை மாய்ப்பினே ஒழிந்த வெல்லாம்.
உயிரால் பெறுவர் செயிரறு காட்சியர்
திருவும், ஒளியும், மருவும் அளியும்.

கபிலர் :- நன்றே புகன்றாய் நலமிகும் வாசகம்;
இன்றே யடைந்தேன் பொன்று உவகை;
இருப்பதோ இறப்பதோ யெனமிக மயங்கித்
தன்னறி வற்றுத் தயங்கினள் சங்கவை,
குவலய மனைத்தையும் கோதறப் படைத்த
தவலறு முதல்வன் தன்னரு ளதனால்
மானிடப் பிறப்பையே மாணுறு பிறப்பாய்த்
தான்வகுத் தனனென யாமறி குவமே;
அரிதே மானிட ராதலும் என்பர்;
அரிதே மங்கைய ராய்ப்பிறத் தலுமே;
மங்கைய ரென்பவர் மாநிலத் தணிகலம்;
மங்கையர் தாமே மாபெரும் உலகில்
வாழ்க்கையாம் சகடம் வழாது செய்தற்
கேற்றதோர் நன்னெறி யேற்றுநிற் பவரே;
கோதையர் தாமே கோதறச் சிறுவர்க்
காதர வளித்தும் ஆரருள் புரிந்தும்
ஓதற் குரியன ஓவாது பயிற்றுவர்;
காமமும், குரோதமும், கள்ளும், சூதும்
கோபமும் குடிகொள் ஆடவர் மனதைச்

சிறியதோர் சுக்கான் பெரியதோர் கலத்தைச்
செல்வுழிச் செலுத்தி அல்வழி நீக்கி
அருங்கரை சேர்க்கும் அரும்பணி போல
நல்வழிப் படுத்தும் நல்லறி வுடையோர்;
பெண்டிர் தாமே பெருகுமிவ் வுலகில்
தண்ணளி சுரந்து தாயென விளங்கி
எல்லா வுயிர்க்கு மேம மாகிப்
பொல்லா வினைகளைப் பொன்றச் செய்குவர்.

சங்கவை :- பெண்டிர் பிறப்பையே பெரிதென உவந்தீர்
கண்டேன் பெண்டிரின் கணக்கறு இன்னலே.

அங்கவை :- யானுங் கூறுவல், என்மொழி கேளாய்!
'கண்டேன் பெண்டிரின் கணக்கறும் இன்னலே'
என்றிவண் கூறிய தெங்ஙனம் ஒவ்வும்?
தொண்டாற் றுவதே தோகையர் கடமை
தொண்டாற் றுபவர் தூயவ ரன்றோ
தூயவ ரெனிலவர் தொன்மை உலகத்
தேவரை யொப்பர் மாதரின் புகழ்காண்.

சங்கவை :- ஆமாம் அறிந்தேன் அரிவையர் நலனே
தொண்டாற் றுவதே தோகையர் கடமை,
பெண்டிர் செய்யும் தொண்டே தியாகம்
அண்டர் கோனவன் அருளைப் பெற்றோர்
தொண்ட ரெனிலது தொலையாப் பேறே.

கபிலர் :- (தனக்குள்)
எத்தனை இன்பம்! என்மனம் குளிர்ந்தது!
இத்தனை யறிவும் எழிலும் நலனும்
இயைந்த மக்களை இனிது பெற்றேனே!
(வானத்தைப் பார்த்து)
பாலொளி பரப்பிப் பசுங்கதிர் விரித்து
வானிடை ஊர்ந்து வளம்பெறச் செல்லும்
வெண்ணிற மதியைக் கண்ணுற் பாரீர்!
கண்கொளாக் காட்சியிவ் விண்ணுல கின்னெழில்
முகிற்குழாம் கிழித்தும் முறுவல் செய்தும்
மகிழ்வுடன் செல்லும மாட்சியைப் பாரீர்!
பெயர்க்க லாகா இயற்கையின் எழில்தான்
விளக்க லாமோ விளம்புவீர் மக்காள்!
(அங்கவை, சங்கவை தலைகவிழ்ந்து நிற்க, கபிலர் பதை பதைத்து)
நீர்நிறை கண்ணுடன் நின்றீர் எதற்கோ?
தாரணி மன்னன் தன்றவ மங்கையீர்!
அவலம் கொண்டிவண் அழுது நின்றீர்
கவலைகொள் முகத்துடன் கலுழ்வ தெவ்வனே!
அறைமின் உம்துயர், அந்தோ, அந்தோ!

(தொடர்ச்சி: 83 ஆம் பக்கம்)

# முகில் நாடு

(திரு. த. பு. நவநீதகிருட்டினன், எம். ஏ., அண்ணுமலை நகர்)

'புதுப்பெயலைக் கொணர்வேன் நான், தண்ணீர் வேண்டியுணங்கும் துணர்களுக்கே, முது வியன் கடலினின்றும் புனலோடைகளினின்றும்; இலைகளை மூய்த்த இளமென்னிழலை நான் வேய்வேன், அவை நண்பகல் காண் கனுக்களின் துஞ்சுங்காலை; என் கூரல்கள் குலுங்கலால், தூவப் பெறுவனவாம், பல்லொரு இன்பத் தளிர் தனையும் விழித்தெழப் பண்ணும் பனித்துளிகள், அவைதம் அன்னை நெஞ்சுறைந்தவண்ணம் தாலாட்டப்பெறும போதினிலே; பனீரெனப் பாய்ந்துதைக்கும் ஆலங்கட்டிகளின் கதிரங்களை நான் கையாள்வேன்; படம விரிந்த பைம்புலங்களைப் பனி வெண்மயமாக்குவேன்; பிற்பாடு மறுபடியும் மழையில் அவற்றைத் தோய்த்துக் கரைப்பேன்; இடியினில் கடந்து செல்லுங்கால் இளித்து நகைப்பேன்'

இனிமை சிறந்தோரென நந்தாப் புகழெய்திய ஷெல்லி (Shelley) எனும் ஆங்கிலப் பாவலர், முகிலொன்று தன் திறனைக் குறித்து, தானே இயம்பிக் கொண்டவாருய், மேற் காட்டியுள்ள வரிகளைப் பாடினுர். முகிற்காட்சி இயற்கையெழிலின் சிறப்புக் கொண்டதாமென, அதைப் பன்னுட்டுப் புலவரும் பாராட்டிப் பாடியுள்ளார். பாவினுரைக்கும் திறமையில்லாமற் போயினும், ஏனைய மக்களும் முகிலினழகி லீடுபட்டவரே எனலாம். விந்தை வடிவங்களுடன் மாறிமாறிவரும் கோலங்கொண்டு வானில் அலைந்து திரியும் மங்குல்களின் நடமாட்டங்களைக் கண்ணயராமல் நோக்கின வண்ணம் மாலையம்போது முழுதையும் மகிழ்வின் தோய்ந்த உள்ளத்தனுய்க் கடத்தாதவனுன மானுடனும் உளனே! பல திறங்களான முகில்களைக் கண்டு களித்ததுடன் நில்லாது, தெரியற் செய்கையோர் (Scientists) அவற்றைத் தக்கபடி வகையீடு செய்து, அறிவுப் புலத்தையும் விரிவாக்கியுள்ளனர். அவரது வகையீட்டு முறையொட்டி, முகில் வண்ணங்களை இனிப் பயில்வோம்.

வானில் மிதந்து கொண்டுள்ள பனி நீர்த்துளிகளின் சேர்வுகளே முகில்களானவை. நிலத்தின் அண்மையில் அதைக் கவிந்த

---

(பாரி மகளிர்: 82ஆம் பக்கத் தொடர்ச்சி)

(அங்கவை, சங்கவை, கண்ணீர் சொரிந்து பெருமூச்சுடன்)

அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையு முடையேமெம் குன்றும பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்த ரெங்கள்
குன்றுங் கொண்டார்யா மெந்தையு மிலமே,

வாறு அமைவுறும் 'மூடுபனி' எனப்படுவதும், நுண்பனித் துகள்களின் திரளே. ஆயினும், முகிலினமைந்த துளிகள், மூடுபனி கொண்டவற்றைவிடப் பெரியவை. பொதுவாக, முகிலின்பாற்பட்ட துளியொன்று, மூடுபனிப்பாற் பட்டதொன்றைவிட முப்பத்தைந்து மடங்கு பருமன் மிக்கதாயிருப்பது. முகிலின் துளி, மூடுபனித் துளியைவிடப் பெரிதேயன்றி, நாம் பொதுவாக 'துளி' எனக் குறிப்பிடும் ஒன்றினளவில், கோடியிலொருபங்கான சிறிதளவினதே. முகிலினமைந்த எல்லாத் துளிகளும் அத்துணைச் சிறியவையல்ல; சில வகை முகில்களில் திணிவாய் உறைந்த சிறிய பனிக்கட்டிகளும் இருப்பன.

முகில்களினுள், முறையே யமைந்த துளிகளின் பான்மைகளை யொட்டி, முகில்கள் பல வேறு வகைகளினவாயிருத்தலைத் தவிர, அம்முகில்கள் வானில் இயலுகிற உயரத்தினளவையும், அவை அமைவுறும் வழிகளையும் பொறுத்தவாறும் வெவ்வேறு திறத்தன வாயுமிருப்பன. இங்ஙனமான பான்மைகளை யொட்டி அவை முக்கிய மாய் வகையீடு செய்யப்படுவன. இனி அவ்வகைகளைக் குறித்துக் கூறலாம்.

அல்லிலகு முகில்கள் (Nocti-lucent): மிகு உயரத்தில் இவ் வகையினவே யிருப்பன; கடல் மட்டத்தினின்று சற்றேறக்குறைய, ஐம்பது மைல் உயரத்தில் இயலுவன; இவ்வுயரத்திற்கு மேல் எவ் வகையினவான முகில்களும் இல. அல்லிலகு முகில்கள் அரிதாகவே தோன்றுவன; மிக மெல்லிய கோடுகள் போலிருப்பன. இவற்றைக் குறித்து அறியப்பட்ட செய்திகள் மிகச்சிலவே. முதலில் காணப் பெற்றவை இரவிலும் ஒளிர்ந்தன; ஆதலால் அல்லிலகு முகில்கள் எனப் பெயரிடப்பட்டன. ஆயினும், அங்ஙனம் மிளிராத திறத்தனவும் உள. இவ்வகை முகில்களில் அமைந்துள்ள பொருள்கள் எவை என்பதைப்பற்றியும், இவை எம்முறை யொட்டி அமைவன என்பதைப் பற்றியும் எதுவும் அறியப்படவில்லை.

நாலிவண்ண முகில்கள் (Nacreous): இவை மென்மை கனிந்த பன்னிறங்களுடன், கடல் மட்டத்தினின்று ஏறத்தாழப் பதினாறு மைல் உயரத்தில் அரிதாய்ப் பொலிவுறுவன. இவற்றைக் குறித்தும் வேறு செய்திகள் எவையும் அறியப்படவில்லை.

சுலவு முகில்கள் (Cirrus): ஒக்கற் சுட்டுவரி (Equator)ப் பாங்கரின் மீது ஒன்பது முதல் பத்து மைல் வரையான உயரங்களிலும், அவ்வரிக்கும் ஆய நிலைப்புக்களுக்கும், (Poles) இடைப் பாங்கர்களின் மீது ஆறு முதல் ஏழு மைல் வரை எழும்பியும், இவை உலவுவன. பொதுவாக, நில மட்டத்தினின்று இரண்டு மைல் உயரமான இடங் களுக்குக் கீழே இறங்குவதில்லை. இவை, உழலும் சுழிகளும் வளையச் சுருள்களும் அமைந்த வடிவங்களைக் கொண்டவை; ஆகவே 'சுலவு' முகில்கள் என பெயரிடப்பட்டன. இவ்வகையின, தனித்தனியாய்ப் பிரிந்து மெல்லிய கூரல்கள் விரிந்தவாறு, இழை இழையாய்ப் பரவி, வெண்ணிறத்தினவாய் ஓடுவன; நிழல் அமைக்கும் தகைத்

திறனற்றவை; பரிதியின் சுற்று வடிவமாயினும், மதியின் நேமிச் செண்ணமாயினும் தம்மூடே தெளிவுறக் காணுவாறு மங்கச் செய்ய வொல்லாதவை. அவற்றின் வெப்பநிலை,—50° (பா) F முதல் —80° (பா) F என்றுனவரை குறைந்திருக்கும். ஆகவே, அவ்வகை முகில்கள் சிறு சிறு பனிக்கட்டிகள் சேர்ந்த அமைப்பினவை. பொதுவாக, இவ்வகை யெழிலிகள் மிகுவுயர் பாங்கர்களிலேயே இயலுவனவாயினும், ஓரோரமையம், நிலமட்டம் வரையுங்கூட இறங்குவன. வேறுவகையினவான முகிற் கவிப்புக்களின்கீழ் இவை பொருந்தி யிருக்கலாம்; அவ்வாறுன இரண்டினிடை ஒண்ணலாம். கதைசூறும் அரக்கரைப் போன்று, இவ்வகை முகில்கள் பற்பல செண்ணங்கள் அணிவன. பையப்பைய, இத்திறமுகில் மறைந்துகொண்டிருப்பின், தெளிந்த வானிலை யுறுவதின் முன்னுரைப்போனெனவாகும்; செறிந்து கருமையாய்க் கொண்டிருப்பின், பெயலுறுவதாகும் வானிலையை அறிவிப்பது. இங்ஙனம், இவ்வகையூரி, தாழ்ப்படிகளிலமைந்த நிறைமிக்க முகில்களின் வழிகாட்டியாயிருப்பது.

**சுலவுப்படர் முகில்கள் (Cirro-Stratus) :** இவை சுலவு முகிலிடங்களுக்கு அடுத்த தாழ் பாங்கர்களில் திரிவன; நிலமட்டத்தினின்று ஒன்றரைமைல் உயரமேயான இடங்கள்வரை இறங்கலாம். இவையும் வெண்மங்குல்களே; பொதுவாக மெல்லியவை; பரிதியை மறைக்க வொட்டாதன. இத்திறமுகில் வடிவற்றது; பால்வண்ண மங்குலாய்ப் பெரும் வெண்கலிங்க விரியலெனப் படர்ந்திருக்கும் ஆகவே சுலவுப் படர் முகில் என்ற பெயருக்கு ஏற்றதாம். சுலவு முகில்கள் பல சேர்வாகி இடையறுது படர்ந்து விரவலால், சுலவுப் படர் முகில் அமைவுறுவதாகும். ஞாயிற்றையும் திங்களையும், முறையே சூழ்ந்தனவாய்க் காணப்படுகிற ஒளிரும் பெருவட்டங்களின் பொருட்டுக்களானவை, இவ்வகை முகில்களே. இத்திறமான தொன்றில் கெழுமியிருப்பனவாகும் நுண்ணிய பனிப்படிகங்களின்மீது பரிதியின், அன்றி, மதியின்கதிர்கள் பட்டுச் செல்லலின் விளைவாய் அவ்வட்டங்கள் துலங்குவன. இவ்வூரிகள் அடர்த்தியாய்க் கொண்டிருப்பின், அங்ஙனமாகத் துவங்கினதற்குப் பிறகு, ஆறுமுதல் இருபத்துநான்கு மணிப்பொழுதினுள் மழையாயினும் பனியாயினும் பொழிவதாகும்.

**சுலவுக்குவை முகில்கள் (Cirro-Cumulus) :** இவை சுலவுப் படர் முகில்களின் பொதுப் பாங்கர்களுக்கு அடுத்த அடியிடங்களில் உலவுவன; பொதுவாக நிலமட்டத்தினின்று ஒருமைல் உயரத்திலானஇடங்களுக்குக் கீழே இறங்குவதில்லை. சிற்சிலபோது, சுலவு முகில்களாயினும் சுலவுப் படர்வகையினவாயினும், பால்தோய்வுறலைப்போன்று ஈட்டம் ஈட்டமாய்ச்சேர்ந்துறைவன. இங்ஙனமான, முகில் விதானம், நிழலமைக்காமலும், நிரலின்றி எவ்வாருகவோவெனப்பரவினவாறும், இழைபிரிந்தவாறுன ஓரங்களுடனும், அமைந்த சிறுமுகிற் கட்டிகளைக் கொண்டிருப்பது. அந்நிலைமையுற்ற வானம், 'தோய்வுறை வான்' (Curdled Sky) எனப்படும்; அதனில், பொதுவாக, முகிற் கட்டிகள் ஒழுங்குற, அணியணியாய்க் கெழுமியிருப்பன. அது,

நீலமீனின் (Mackrel) முதுகில் காணப்படும் பன்னிறத் தோற்றங் கொண்டதாயிருக்கும். ஆதலால், 'மீனவானம்' (Mackrel Sky) எனப் படுகிறது. மீனவான் கொண்ட முகில்கள் பேரலைகள் புரண்டவா றிருப்பன; அவற்றின் குறுக்கே சிற்றலைகளன்ன சிறுமுகில்கள் ஓடு வன. இவை, 'சுலவுக் குவைகள்' (Cirro-Cumulus) எனப்படுவன இவை, வெள்ளிடைக் காற்றினமைந்த மெல்லிய நிலையிலாப் படலங் களில் ஏற்படும் சிறுசிறு சுற்றோட்டங்களைப் பொருட்டாய்க் கொண் டவை. முகிலமைப் பொருள் அவற்றில் சிறிதளவுக்கே இருப்பதாம்.

**மீப்படர் முகில்கள்** (Alto-Stratus): சுலவுக் குவைகளின் பொது நடமாட்டவிடங்களுக்கு அடுத்த கீழ்வைப்புக்களில், இவ்வகையினவை அடர்ந்து திரண்டிருப்பன. நிலமட்டத்தினின்று முக்கால்மைல்உயரம் வரையான இடங்களின்கீழ் இறங்குவதில்லை. வெண்மையாயும் வெண்ணீலமாயும், அவ்விரண்டி னிடைப்பட்ட மென்னிறங்களாயு மான முகிலெழினிகளென்னவிருப்பன; சிலபோது நூல்நெசவுப் பாவு களோடினவாறுன அமைப்புக்கொண்டிருப்பன. மற்றபபோது,அமைப் பற்றிருப்பன. பொதுவாக, அவற்றினூடே, வெண்டேய்வுக் கண் ணுடியினூடே பெறும் தோற்றப் பாங்காய், பரிதி வயங்கிடத்தைக் காணலாம்; ஆனல் பரிதியின் வடிவத்தைக் காணல் இயலாது. இவ் வகை முகில்கள் பலவழிகளில் அமைவுறுவன. குவை முகில்களின் மேற்பகுதிகள் வளிச்செலவு கொண்டு பரவலின்பொருட்டு, மீப்படர் முகில்கள் தோன்றுவன. ஈரமூறின காற்றுப்படலமொன்று, அப் பாங்கரிலேயே குளிர்வுறலின் விளைவாய், இவ்வகைமுகில்கள் அமைய லாம்; ஈரப்பதனன வெப்ப வளிப்படலமொன்று, அதனினும் குளிர்ந்த படலத்தின் மீது வீசியேகும்போது, அவற்றிடை மீப்படர் முகில் பொருந்துவதாகும். மீப்படர் முகில, அதன் மருங்குகளிலான காற்றுச் சுற்றோட்டங்களின் பொருட்டு அலங்குவதில்லை. அவ்வாறு யின், அஃது மீக்குவை முகில் என்ற இன்னெரு வகையினதாயாகி விடும். அஃது, இயக்கமிகுதியில் விரிந்த சுற்றோட்டத்தின் விளை வானதுமல்ல; அங்ஙனமாயின், மழை அல்லது பனிப் பெயலை உடனே தோற்றுவிக்கும், அவ்விளைவு மீப்படர் முகிலபாற்பட்டதொன்றல்ல.

**மீக்குவை முகில்** (Alto-Cumulus): இவ்வகையினவை, மீப்படர் முகில்களின் அடிப் பாங்கர்களில் ஈட்டமாவன; அடர்ந்து சேர்ந்த தனித்தனி முகில் மொய்களாலான வான மேனிலை யமைப்பன. அங்ஙனமான குவையொன்றின குறுக்களவு பரிதித் தோற்ற அளவினதைவிட சில மடங்கே மிக்கதாயிருப்பது. அம் மொய்கள் விளக்கமாய்க் கண்ணுறத்தக்க நிரைகளாய்ப் பொருந்தியிருப்பன. பொதுவாக, அவ்வணிகள் இருவட்டங்களில் தொடர்ந்த தொடுப்புற் றிருப்பன. இவ் வகையினவற்றில் சிறு சிறு குவைகளிலமைந்தவை, வெண்மையாயிருப்பன; பெருமொய்கள் பற்பல சாயல்கள் புனைந் தவை. பரிதியினின்று, 20° முதல் 30° வரையான கோணச் சாய்வுப் பொருத்தமானபோது, முகிலினமைந்த நீர்த்துளிகள் வெயி லுறைத்து ஆவியாய்ப் போகும்நிலைமையில், வியத்தகு நிறக்காட்சிகள்

தோன்றுவன. சிறந்த முத்துச் சிப்பியின் வண்ணமாய், இளஞ்சிவப்பும் பச்சையு மோடின மெனனிறங்கள் பொலிவுறுவன. நுண்ணிய இடைவெளிகள் விட்டபடி ஒழுங்குறப் பொருந்தின நீர்த்திவலைகளின் மீது வெயில் விழுகிறது; அவ்வெண்ணொளி, அப்போது திறங்கோதுத லுறுவதாகும். (Diffracted) ஆதலால, ஒண்மையினுங்கு பன்னிற வொளிகள் விரிவன. அந்நிற வொளிர்வானது, தன்னெழிலால் நம் முள்ளத்தைக் கவர்தலுடன் நில்லாது, மீக்குவை முகில்களில் நீர்த் துளிக ளிருப்பனவே யனறி, உறைபனித்துகள்களில என்ற செய்தியையும் உரைப்பதாம்.

சுலவு வகையானவற்றைப் போன்றே, மீக்குவை முகில்களும், ஓரிடத்தான காற்றுப் படலங்களிலெழும் சுற்றோட்டங்களின் பொருட்டுக்கொண்டு அமைவுறுவனவாம. ஆனல், மீககுவையிலான ஈரத்தகவினளவு, சுலவுக்குவையிலானதை விட மிகையானது. ஆங்காங்காயிருக்கும் தனிப்பட்ட தன்ன முகிலொன்றிலான ஈரத்தகவு, பொதுவானதைவிட மிகப்பேரளவினதாயாயின், அஃது, தனதருகிலான மற்ற முகில்களைவிடப் பெருத்து நிவந்ததாகும். அவ்வாறு பாரிக்கப்பட்ட முகிலோடு 'மீக்குவை வேணகை' (Alto-Cumulus Castellatus) எனப்படும். அது, பொதுவாக, மழையின் வழியுரைப் போனுயிருப்பது. வழக்கின், முழுமுகிலோடே, 'மீக்குவை முகில்' எனபபடுவது; அக் குவையிலடங்கின தனித்தனி சிற்றுரிகள் தனிப் பெயர் கொண்டில.

**படர்க்குவைமுகில்** (Strato-Cumulus) : வேறுபட்ட அளவுகளுக்குச் செறிநதவாறு, இன்னொருவகையினவான முகிலேடுகள் இயலுவன. அவை கரும சாமபல நிறமான முகிலுருண்டைகளும முகிற் சுருள்களும, மெலலிய முகிற் பிடியல்கள் வாயிலாய் இணைவுற்றவாறு யிருப்பன. அவ்வகையினவை, மீக்குவைகளைவிட பெருத்தும செறிந்தும இருப்பன. மீக்குவைகள் உலவும் இடங்களுக்கு தாழ்ந்த மட்டங்களிலேயே, படர்க்குவைகள் எனப்படும் அவ்வகை முகில்கள் அலைவன. பொதுவாக, படர்க்குவையொன்றிலடங்கின சிறுசிறு முகில் முத்தைகளினது முடிப்பகுதிகள், முறையே, தனித்தனியானவாறு கூமபிச் சென்று, உச்சியில் வட்டணையுற்றிருப்பன. ஆயினும், பல போது, சென்னிப் பகுதிகளும், மட்டப்பநதரினடியில் புகையரவலனைய படாந்து கலவையாவன. புகையைப் பரப்பும் பந்தர்த் தட்டம் போன்ற தொனறை அடைதலாலேயே, முகிலுச்சிப பகுதிகளும பரவுவன. அவ்வாறுன பநதர்த்தடுப்பன்னது, அவ்வுயரத்தில் எவ்வாறு பொருத்தலாவது, என்பதை சுருக்கமாகக் கூறலாம்,

ஒலிமுந்நீர் வரம்பான வியன்ஞாலப் பரப்பு முழுதையும், ஐந்நூறுமைல உயரமவரை விரிந்த காற்றுப்பொழில் கவிந்திருப்பது. அப்பொழிலில மேலாயேற, ஏற, வெப்பநிலை, முறையே குறைந்து கொண்டிருப்பதாம். ஆனல், ஐந்நூறு மைல் உயரமவரை, குறைந்து கொணடே போவதில்லை. ஒககற சுட்டுவரியினமீது, எட்டுமுதல் பத்துமைல்உயரத்திற்குமேலும, மற்றப்பாங்கர்களின்மீது, ஆறுமுதல்

எட்டுமைல் உயரத்திற்கு மேலும், வெப்பநிலை குறைந்து போவதில்லை. ஆகவே, காற்றுப் பொழிலினிடை, அவ்வுயரத்தில் வளிப்பரவையின் தகவு மாறுபடுவதாம். அம்மாற்றத்தையொட்டி பந்தர்த் தடுப்பை யொத்த தகைப்புமேனிலை விரிக்கப்பட்டிருப்பதாகும் எனலாம். மேலும் இதைக் குறித்து விரிவுரை நிகழ்த்துவோமாயின், முகில் நாட்டை மறந்து போகுமாறுகும். ஆகலின், அப்பாண்டிலுக்கு மீளுவோம்.

கார்முகில் (Nimbus) : புயல்காற்றுக்களாயினும், சூறுவளிகளாயினும் அடிக்கும்போது, அவற்றுடன் தொடர்பான முகில்கள், சுலவு வகையினின்று, சுலவுப் படர்வினவாய் மாறி, பிறகு முறையே, மீப்படரியலுறுவனவாம், இவைசெறிந்து கார்வண்ணமாகி இறங்குவன ; தனித்தனியாய் வயங்கின நிலைமையை விட்டனவாயாகி, ஒருங்குற்றுச் சேர்வன; வடிவச் சுட்டலற்றனவாயாகி, வான முழுதையும் மூய்வன; இறுதியில் மழை பொழிவன; அன்றி பனிப்பெயலுறுவதாகும். இந்நிலைமையிலும், இதற்குச்சற்றுமுன்னுனதறுவாயினுமுள்ளமுகில்கள், 'கார் முகில்கள்' எனப்படுவன. சிலர், அவற்றைக் கார்ப்படர் முகில்கள் (Nimbo-Stratus) என்பர். பொதுவாக, ஈரப்பாங்கான காற்று, தன் செலவைக் குறுக்கிட்டவாறுயெழுந்த தடுப்பின் மீது படிப்படியாயேறி வுயருங்கால், கார் முகில் விளைவுறுவதாகும். அவ்வாறான தடுப்பு, மலைச்சாரல், வகையான திணிப் பொருளமைத்தவாறுயிருக்கலாம்; அன்றி, வெப்ப நிலை மாற்றங்களை யொட்டிப் பொருந்தலான குளிர்ந்த காற்றுப் படல வகையினதாயிருக்கலாம். பெரும்பாலுமாக, எல்லா வகையினவான முகில்களினின்றும் மழை தூறலாம்; அரிதாக, எவ்வகையினதாயாயினுமான முகில் ஒன்றேனும் காணப்படாவாறுயுள்ள தெளிந்த வானினின்று மழை பொழிதலைக் காணுகிறோம். ஆயினும், பெரும் பெயல் பொழியும் வகையினவான முகில்களே, 'கார் முகில்கள்' என்ற பெயருக்குகந்தனவாம்.

குவை முகில்கள் (Cumulus) : வானிலையானது, அமைதியின் தெளிந்த வெப்பங் கொண்டவாறுயிருக்கும்போது, ஆங்காங்கான, நீர் நிலப் பரப்புக்களின் மீது வெயில் உறைத்தலால், காற்றோட்டக் கால்கள் (Convection Currents) பல இடங்களில் எழுச்சியாவன. மேற்படலக் காற்று, சிறிது ஈரம் வாய்ந்ததாயிருப்பின், ஆங்கெலாம் முகில்கள் அமைவுறுவன. அவ்வாறாக முகில்களமைத்த தூண்களை வானில் காணலாம். அவ்வகை முகிலொன்றின் சென்னி வாட்டம் வட்டணையுற்றிருக்கும் ஞாங்கர்கள் புடைத்திருப்பன; தாட்பகுதிகள் பரவியிருப்பன. அகலிய முகட்டில் பெருமுகைக் கொத்துக்கள் நிவந்திருத்தலைப்போல, அம் முகில்கள் தோன்றுவன. அவ்வாறானவை, குவை முகில்கள் எனப்படுவன. அவ்வகை முகிலொன்று, பரிதியினொளிபடும் இடங்களில் வெண்ணிறப் பொலிவு கொண்டிருப்பது; வெயில் வீழாப்பகுதிகளில், நீலச் சாம்பல் நிறமாயும், இன்னும் கருவலாயுமான சாயலுற்றிருப்பது; ஒளியோடின ஓரங்களுடன் மிளிர்வது; கண் காணுத் தூண்களால் தாங்கப்பட்டவாறு, வியத்தகு சிற்

பச் செண்ணங்கள் கொண்ட இறும்பூதுத் தகையான மாடங்கள். நேர அமைந்திருப்பன. சிலமுகில்கள் தம் மருங்கிலானவற்றினும் மேலாய் நிவந்திருப்பன ; ஆனால், ஓரிடத்திலும் ஒருபொழுதிலுமாய் அமைவுறு கிற பெரிதும் சிறிதுமான அனைத்தின் அடிப்பகுதிகளும் ஓரேயெடுப் பான வுயரத்திலேயே யிருப்பன. அவ்வுயரம் நீர் நிலப்பரப்பினின்று எழுந்த காற்றினேற்றான நீராவி குளிர்ந்து நீர்த்துளிகளமைந்த முகி லாயதற்கான வெப்பநிலையினதா யிருப்பது.

குவை முகில் கொண்ட காற்றுத் துகள்கள் கடுங்கொந்தளிப் புற்று குலுங்கிக் கொண்டிருப்பன. அதனாலேயே, அம்முகிலின் சிறைகளும் முகடுமானவை, வடிவத்திலும் அளவிலும் மாறி மாறிக் கொண்டிருப்பன. அவ்வாறான முகில்களிடைச் சென்ற வானோர் பாளர் (Aviators) அக்குலுங்கல்களிடை உழன்றனராகி, அவற்றின் உண்மையை நேரே கண்டறிந்த சான்றுரைககின்றனர். இங்ஙனம், குவைமுகிலமைதற்கான பொருட்டு, நீர், நிலப்பரப்பு வெப்பமுறலைப் பொறுத்த கடுமையான காற்றேட்டக் கால்களேயாமென விருத்தலா லேயே, அவ்வகை யெழிலித் தோற்றங்கள் நாப்பண் குறுக்கை விரித் தனையனவான (Middle latitudes) பாங்கர்களில் வேனிற்கால நிகழ்ச்சி களாயும், திரும்பலகுக் கூழைப் (Tropical) பாங்கர்களில் மிகுதியா யும், இருப்பன ; ஆய நிலைப்புப் பாங்கர்களில் அரிதாகவே நிகழ்வன. ஓரோரமையம், அவ்வகையான முகில்கள் பல, புகைக் கூடுகளின் தொடர்த் தொடுப்பு நேர வமைத்து, தமதடிப்புறத்தான ஆற்றங் கரை, கடலோரம், இன்னோரன்ன எல்லைக் காட்சிகளை மறைத்திருப் பன ; திறந்த வெளியான பெருநீர் மீதிருத்தலினும் பொலிவாய்ச் சிறு வரைத் தீவுகளின்மீதிருப்பன ; நிலவியன்மீதாய்ப் பகலில் மிகுந்திருப் பன ; கடற்பரப்பின் மீதாய் இரவில் சிறந்திருப்பன. பொதுவாக, அவ்வகை முகிலானது, தெளிந்த வானிலேயே அமைவுறுவது ; ஏனெ னின், வேறு பலவகையினவான முகில்களால் வானமவேயப்பட்டுள்ள போது, நீர் நிலப்பரப்புக்கள் வெம்மையுறல் இயலாதுபோம். காற்று, கடுமையாய் அடித்துக் கொண்டிருப்பின், அதன் ஓட்டக் கால்கள் எழும்பிச் செல்லல் ஒல்லாது; ஆதலால், அந் நிலைமையில் குவை முகில்கள் தோன்றமாட்டாவாகும்.

**குவைக் கார்முகில்** (Cumulo-nimbus) : நீர் நிலப் பரப்பினின்று நீராவி யேற்றான வெப்பக்காற்று தொடர் வண்ணமாய் எழும்பிச் செல்லலின், விளைவாய், குவை முகிலமைந்து, அஃது பருமன் மிக்க தாய்ப் பெருகி யெழும்பிற்றாயின், அதனுள் கெழுமின நீர்த்துளிகளில் பல பேரளவினவாயும் நிறை மிக்கனவாயுமாவன; அந் நிலைமையில் மழைத் தூறல் உருத்துவன, பொதுவாக, அத் திவலைகள் நிலத்தில் வீழ்வன; ஆனால், வறட்சி மிக்க பாங்கர்களில். நிலத்தை அடையாமல், காற்றினிடையிலேயே மீட்டும் ஆவியாகி எழுவன. மழை பொழியும் நிலைமையடைந்த குவை முகிலானது, குவைக் கார் முகிலெனவாகும். மழையுடன் இடியும் மின்னலும் வருவன. பல போது, குவைக் கார் முகிலின் சென்னிப்பகுதி பட்டடையிரும்பின் வடிவமாய்ப் பரவும்; இறுதியில் மிகவுகப்பான பகுதி வளிகொட்பின் விளைவாய் சுலவு முகிலேடாய் விரிவதாகும்.

**படர் முகில் (Stratus)**: சிற்சிலபோது, தாழ்ப்பாங்கரிலேயே, நிலமட்டத்திலிருந்து ஏறக்குறைய அரைமைல் உயரத்தல், வடிவமில்லாச் சாம்பல் நிற முகில்கள் தோன்றுவன. பெரும்பாலுமாக, அங்ஙனமானவற்றினின்று மழைபொழிவதில்லை; அரிதாய்த் தூறினும், அது பெரும் பெயலாயிருக்காது; சிறு தூவலாயிருக்கும். அப்பான்மையான முகில்கள் 'படர்முகில்கள்' எனப்படுவன. அவை, நில மட்டத்தினின்று சற்றே யுயர்ந்த வயின்களுக்கும், ஆங்கிருந்து மூவாயிரம் அடி உயரத்தான இடங்களுக்கும் இடைப்பட்ட பாங்கர்களில் திரிவன அவ்வகை முகிலானது, பலவழிகளிலாய் பயத்தப் படலாம். கீழமைந்த குளிர்க்காற்றுப் படலத்தின்மீது, ஈரங்கொண்ட வெப்பக் காற்றுப் படலம இயங்கும்போது, அவ்விரண்டும் வருடிக்கொண்டபடி சரிகிற பரப்புழிகளில், படர்முகில அமைவுறும்; வெப்ப நில மருங்கில் மூடுபனி திரியும்போது, அப்பனியின் கீழ்ப் பகுதிகள் வெப்பமுறைதது ஆவியாய்ப்போவன. மேற்பகுதிகள் தனிப்பட்டு, படர்முகில்களென மிதப்பன. முகில்கள் அனைத்திலும், மிகத் தாழ்ந்த களங்களில் உலவுவவை, படர் முகில்களே; மாற்றங்களில்லாது ஒரேவாறு யிருப்பன. ஒரே படித்தகவினவாய்த் தோன்றும் அம்முகில்கள், காணுவோரின் உள்ள மகிழ்ச்சியெழுப்பாமல், அவர்க்குச் சலிப்பையே தருவன.

இங்ஙனம், நீராவியென்ற இழைப்பொருள் வகையொன்றுனதைக் கொண்டே, இயற்கையன்னை பல நிற முகிலாடைகளை நெய்து அணிந்து கொள்கிறுள். இவண் நாம குறித்தவை, அவற்றில் சிலவேயாம். சிறப்பின் பொலிந்து, எண்ணினடங்காத தொகையினவான முகிலாடைகளை யுடையோள் அவ்வம்மை. அவளது திறமையின் செல்வம், வரம்பிலடங்காதிருப்பது. நாம கூறின சில வகையினவான ஆடைகளை வனைந்தபோதும், பொதுவாக கை செய்யலின் காலை நிகழ் தலைப் போலவே, சிற் சில துணிகள் எஞ்சிவிட்டன. அவையும் புறக கணிக்கத் தக்கனவாகா; ஆதலால், மிச்சம் விடாமல் அவற்றையும் புகறல் ஏற்றதாம்.

**திரை முகில் (Billow Cloud)**: இஃது, மீக்குவை வகையினடங்கினதேயாயினும், அந்நீர்மையிலேயே சிறந்து தோன்றுவது; ஆதலால், பொதுவான மீக்குவை முகில்களினினறு வேற்றுமையான தகவு கொண்டவாறு எடுப்பாயிருப்பது; தனிப் பெயர் பெற்ற பெருமையினது. நீணடும மெலிந்துமுள்ள முகிற்பட்டைகள் நிகரிடை வெளி விட்ட ஒழுங்குடன் அமைநதவாருய்த் திரைமுகில் காட்சி தருவது. ஒவ்வொரு பட்டையிலுங் கூட, நுட்ப வேற்றுமைகள் கொணட அமைப்புப் பாத்துக்கள் பொருந்தியிருப்பன. காற்ருேட்டக் காலொன்று இன்னொன்றின் மீது புரளும போதான அணவுப் பரப்பில் கெழுமலாகும் அலை வடிவத்தின் எழுச்சிக் கூறுகள், பதிவுறலால், திரைமுகில் அமைவுறுவது, எனக் கருதப்படுகிறது. பொதுவாக இங்ஙனம எழுந்த முகில் வகையையே, 'திரைமுகில' என்ற பெயர் நுதல்வதாம. ஆயினும், சுலவுக குவை வகையிலும், படர்க் குவை வகையிலுங் கூட, ஓங்குதிரை மாலையினவை யிருப்பன;

இவ்வகைகளானவற்றின் அலை நீளங்கள் குறைந்த அளவினவை; ஆதலால் அவ் வலை வடிவங்கள் பொருந்தற்கான பொருட்டு மேற் கூறப்பட்டவாறுயிருத்தல் இயலாது எனத் தெளியலாம். பல நிற முகில்கள்பாற்பட்ட ஆராய்ச்சிகள் இன்றும் செய்யப்பட்டு வருவன; இதுகாறும் அறியப்பட்ட ஆய்வுச் செய்திகளினின்று, திண்ணமான முடிவு எதுவும் பெறப்படவில்லை. மேலுமான உன்னமூன்றின காணலும், சோதனைகளும், சிந்தனையும் ஆற்றின பிற்பாடே, தேற்ற முடிவு அடையலாகும்.

**வில்லை வணர் முகில்** (Lenticular Cloud): ஓரோரமையம், தனித்த முகிலொன்று (அது தனி யொன்றுயானதாகவேனும், தொகுப்பி னின்று தனிவேருகி வந்ததாகவேனும் இருக்கலாம்) இருபுறமும் வளைந்து புடைப்புற்றவில்லை (Double Convex Lens) ஒன்றின், வடிவ மாயிருக்கும்; அதாவது, அதன நாப்பண் பகுதி வெளிவாட்டமாய்ப் புடைத்தும், நுனிப்பகுதிகள் கூம்பி மெலிந்தனவாயு மிருப்பதாகும். அவ்வாருன முகில், 'வில்லை வணர் முகில்' எனப்படும். அஃது, மீக்குவை, மீப்படர் இன்னோன்ன வகைகளில் எதன்பாற் பட்ட தாயும் இருக்கலாம். அவ் வடிவமாய், முகிலொன்று அமைதற்கான பொருட்டு எதுவாதும் என, செவ்வைத் திருத்தமாய், இதுகாறும் தெரிந்திலது ஆயினும், அப் பொருட்டு, பின்வருமாருயிருக்கலாம் எனக் கொள்ளப்பட்டுள்ளது.

சிறியதுவை முகிலொன்று ஏறுங்கால், ஊற்றமான காற்றுப் பகுதி யொன்றுல் தகைக்கப்படுகிறது; அப் பாத்தியில், எழுமை பொறுத்து வெப்பநிலை மிகச் சிறிதளவே மாறுவதாயிருப்பது ஆகலால், கீழினின்று ஏறி, அதை அடைந்த குவைமுகில், அதனுள் மிகுதியாய் ஊடுருவி யேற இயலாததாகி, ஆங்கே பரவுவதாகும். வளிவீசும் திசை, அதன் வன்மை, இன்னோன்ன பொருட்டுக்களுக் கேற்றபடியான வடிவமுற்றதாய் அம் முகிலானது ஏலுதலாகும். பெருங் கொடுமுடிகளும், மலைச் சாரல்களும், வில்லை வணர் முகில்கள் அமைதற்கு இணைதருவன; அவ்வகை முகில்கள் செழுமற்கான தடுப்புக்களாய், அவை பொருந்தியிருப்பன.

**ஏந்து முகில்** (Crest Cioud): ஈரமிக்க காற்றுப் பாத்தியொன்று மலைக் கடமேறி, கொடுமுடியடைந்து, அதனைத் தழுவிக் கொண்ட தாயின், அஃது, ஆங்கே, ஏந்து முகிலெனப் பொருந்துவதாகும்; அக் குவட்டின் பன் மருங்குகளையும மூய்த்த பெருமவெண் போர்வை யாமென, அஃது, அவ்வுழியில் பரவி ஞாலின வண்ணமிருப்பதாம்.

**அறலோங்கு முகில்** (Riffle Cloud): மலை யொன்றின் ஒரு புறத்தில் வன்மையுடன் வளி வீசிக்கொண்டிருப்பின், ஊதையடிக்காத மலைப் பக்கத்தின் மீதான காற்றுப் பகுதியில் நீண்ட குவைகளான முகிற் றிரைகள், ஏந்து முகிலுடன் தொடர்பாய் இகு தருவன. இவை 'அறலோங்கு முகில்கள்' எனப்படுவன.

**பதாகை முகில்** (Banner Cloud): சில போது, கூம்பியெழுந்த கொடுமுடி யொன்றினின்று, முகிலொன்று நிலவந்ததாகும். அம்

முகட்டைச் சூழ்ந்துள்ள தெளிந்த வானில், அஃது, பெருங்கொடியொன்று பறத்தலைப்போல் ஆலிக் கொண்டிருக்கும். அவ்வகை 'பாதகை முகில்' என்ற பெயர் கொண்டது. பாதகை முகில் அரிதாகவே தோன்றுவது; விளைந்தபோது, உள்ளங் கவர் வண்ணக் காட்சியாயிருக்கும்.

**சாமரை முகில்** (Boa Cloud): ஓரோரமையம், பெரும் புனலன்ன முகிலாறுவென ஆனதொன்று இயலின வழியில் தனி மலையொன்று குறுக்கிட்டதாயின், அதை அம்முகிலாறு நாற்புறமும் சூழ்ந்திடலான வாறுயாகும்; அப்போது அம்மலையைப் பெரும் வெண் சாமரமொன்று சுரியல்விரித்து நீவிக்கொண்டிருப்பதைப் போலிருக்கும். அவ்வகை முகில் 'சாமரை முகில்' எனப்படும்.

**விணிகைமுகில்** (Scarf Cloud) பெருக்கமடைந்து கொண்டுள்ள குவை முகிலொன்றை, ஒருவன் உன்னிக் கண்ணுற்ற வண்ணமிருப்பின், சிற்சிலபோது, அதன் மேல்வாட்டத்தில் சற்று ஏற்றமாயுள்ள வாளரங்கில், மென்பட்டின் பளபளப்புடனுன சிறு முகிலொன்று திடீரென கிளம்புகிற காட்சி கண்டு மகிழலாம். அச்சிறுமுகிலின் மேற்புறம் வளைவாயிருக்கும்; அஃது, பெருமுகிலினது சென்னியின் மேலாயமைந்த ஒளி நேமியின் திறமெனப் பாணப்படுவதாகும்; சிறு பொழுதான பின்னர், அவ்வொளி வசிவு, பெருமுகிலின் முடியை முற்றும் சூழ்ந்தவாறுயாகி, அதன் தோட்களன்ன பாங்குகளை அணைந்தவாறு சேறலாகும். இங்கனம், அப்பெருமுகில், தன் தோட்களையும் தலையையும், சுற்றியணிந்துகொண்ட பட்டுக் கச்சைப் போன்று, அச்சிறுமுகில் இருப்பதாகும். அஃது 'விணிகை முகில்' எனப்படும். பெருமுகிலானது, தன்னருகிலமைந்தவாறுன வெப்பக் காற்றுப் படலமொன்றை குளிர்விப்பதால், அப்படலம் சிறுமுகில் வடிவத்தினுய் அமைவுறுகிறது. பிறகு பெருமுகில் வளர்வினெழுங்கால், அஃது, சிறு முகிலைத் தன் அணியலாய்ப் புனைவதாகும்.

**கொம்மைக் குவைமுகில்** (Mammatu-Clmulus): பெரும்பனங்காய்க் குலைகள் பலஅடுத்தடுத்து அடுக்கப்பட்டவாறு, வானைப்பொற்புறுத்தும் முகிலுருண்டைகளாலான கோவைகளை நாமெல்லோரும் கண்டு வியநதவரேயாம். இவ்வாறு, ஆயிரமாயிரமாய் மல்குமெண்ணினவான கொம்மைகள் கொண்டுள்ள பேரம்மையன்ன பீடுகெழு முகிலானது, 'கொம்மைக் குவைமுகில்' எனப்படுவதாம். அஃது, கொடுஞ் செலவு கொண்ட வன்வளி கொட்புடனுறுவதாகும் பெரும் பெயலின ஒத்த பண்புரைப் போனெனவானதாம. அத்தகை முகிலின் எழுவாய்ப்பொருட்டு எதுவானதுஎனத் தெளிவாய் அறியப்பட்டிலது ஆயினும்பின் வருமாறுய் அப்பொருட்டு இருக்கலாம் என்க் கருதப்படுகிறது. பொதுவாக, வெள்ளிடைக் காற்றில் மேலேறிச் செல்லும் ஓட்டக் கால்களே இருப்பன. ஆனுல் சிலபோது, எங்ஙனமாகவோ வெனவானவாறு, கீழிறங்கும் ஓட்டக் கால்கள் தோன்றுவன. அவற்றின் விளைவாய்க் கொம்மைக் குவை முகில்கள் கெழுமுவன.

**சூறைப்பிறங்கு முகில்** (Tornado Cloud): இத்தகை முகிலானது கடும் விரைவுடன் சுழன்றுகொண்டிருப்பது; உள்ளிடப்புழையானது; மேற்பகுதி பெருத்து, கீழ்ப்பகுதி சிறுத்தவாறு, அடி நோக்கிக்

கூம்பியிருப்பது தலை வாட்டக் குறுக்களவு ஆயிரம் அடி வரையிருக்கலாம்; தாள் வாட்டத்தினது, நூறு அடி வரையே யிருப்பது; நிலமட்டத்தின் அண்மையினின்றே எழும்பினவாருயாகி, உயரத்தில், செறிவான சூறைப் புயல்களிடை விரவினவாருயிருப்பது; மிக விரைவான சுழற்சியின் விளைவாய், உள்ளிடத்து அமுக்கம் மிகவும் குறைவுற்றதாகும்; ஆதலால் ஆங்கான காற்று விரிவடையும்; அதை யொட்டிக் குளிர்வுறும்; அப் பொருட்டினுல் மழை பொழிவதாகும்.

முகில் நாட்டின் இறும்பூது பொலிந்த காட்சிகளுக்கு ஈறிலது கொண்டல்களைப்பற்றிக் களிப்புரு மகிழ்வுடன் சொல்லிக்கொண்டேயிருக்கலாம். ஆயினும், மாந்தரியலான சலிப்பைக் கருதி, எழிலித் திறமுரை காதையை இத்துடன் நிறுத்திக்கொள்வோம். ஆங்கில அரசவைப் புலவராய் விளங்கிக் காலஞ்சென்ற ராபர்ட்டு பிரிட்ஜஸ் (Robert Bridges) இயற்றின நெடும்பாவான 'எழிலின் வண்ணச் சீரணிமை' (Testanert of Beauty) என்ற தன் பகுதியாய் அமைந்த முகிலுரையை எடுத்துக்காட்டி இக் கட்டுரையை முடித்தல், ஏற்றதாகும் என எண்ணுகிறேன். அவர் கூறுவன.

'வானின் ஓய்விலாக் கொண்டல் நாடு—அது விள்ளலாகி வரும் விளையாட்டுடன், பகலொளியை பல்லுருவ நிழல்களினூடே சலித்தெடுக்கும்; அந் நிழல்கள், ஒருபோது, திரண்டடர்ந்த தூண்களாய் நிற்பன ஈட்டப்பெற்று மாண்பிணுயர்ந்து, மனச் சால்பினவாயாகி, வெண் பனி யோங்கு திரை புரண்டவாறு பளபளப்பான மினுமினுக்குடன் ஈரிசை குவியப்பட்டனவாய்; ஓரமையம், அவை பாய் விரிந்த நாவாய்கள் அமைதி நிலவின கடலில் செலவின்றி மிதந்தாலின காட்சியினவாயிருப்பன; ஒரு போழ்து, ஆர்வி மிகு எரிக்கொழுந்தடியிலாய், காற்றில் பரவும் சிதறுண்ட சிறு துரும்புக் கற்றைகளானவாறு திரிவன; ஒரு தருணம், நிவந்து விரிந்த வெள்ளிடை வியனுக்கு வெள்ளியினும் முத்துச் சிப்பியினும் இழைத்த வண்ணக் கலிங்க விணிகை அணிவிப்பன; ஆழ் வெண்ணீல வியலிடை விந்தைக் கோல மோடினவாறு இருப்பன; ஒரு பொழுது. நம் தலைமீதாமென அண்மையில் துள்ளிப்பாய்ந்தவாருயாகி, மைநிறஞ் செறிந்து திரிதரு பந்தய மோடிகளாயாகி, அவை, வளி கொட்புற்ற புயல்களெனத் தாரை தாரையாய் மழை பொழிவன; பகட்டான வசிவுகளுடன் நிலத்தைத் தாவிக் குதிப்பன; அன்றி கொடுஞ் செலவுலவையின் ஆவி இயலினதாயின், உப்பலாய் உருகின ஊரிகள் வான் தொடு பெல்லையில் கள்ளமாய் ஏறுவன; ஏறும்போது, ஈட்டமாகி, எரி மின்னலுடனும் இடியுடனும் தோய்த்துநனைக்கும் வெள்ளத்துடனும் அமுத்தப்பட்ட பொதியேற்றப்பட்டு, வங்கூழ்களை எதிர்முட்டினவாறு கருநீலச்சீற்ற வெருட்டலுடன் ஞாலுவன, அவை தள்ளப்பட்டு அகற்றப்படும் வரை; அப்போது, வந்தையான இரவு அமைதி நிறைந்ததாயாகி, விண்படலிகையை வேய்ந்த மங்குலான எழினியை எடுத்துவிட்டு, படைப்பின் குழவிப் பொழுதினுன விளையாட்டுப் பொருள்களை மன்றுபடக் காட்டுகிறது; அவளது வியனுன கண்ணறையின் அழிவிலா தணற் பிழம்புகள், பட்டி நாட்டுப் பாங்கரில் எழும் துணைநல்கு தீவட்டி யொளிச் சுடர்களொப்ப, இமைபபன."

# தமிழணங்கு பதிகம்

நல்லை. திரு. அ. இளங்கோவன், உப்பத்தூர்.

## காப்பு (வெண்பா)

பொன்னைக் குறித்தலது பூவைக் குறித்துரையா
துன்னைக் குறித்தே யொருபதிகம்—பன னுகிறேன்
தாயே தமிழணங்கே தண்ணருளைத் தந்தணைத்துச்
சேயேன் மகிழ்ந்திருக்கச் செய்.

## நூல் (கலி நிலைத்துறை)

பூவியல் பாய்ந்தே பொருளுரை கூறும்
புலவோர் தமதினிய
நாவியல் பென்றும நலமுறச் செய்திடும்
நல்லியல் புற்றழியாத்
தேவியல் போடுந் திகழ்ந்து விளங்கிச்
சிறந்திடும் சேயிழையாய்த்
தாவியல் பின்றித் தளிர்த்திங் கிலகிடுந்
தாயே தமிழணங்கே! (1)

தெய்வமென் றொன்றைத் தெரிந்தெடுத் துள்ளுறச்
சேவித் திடுகின்றார்
உய்வமென் றிந்த உலகினில் உள்ளவர்
ஒப்பிலான் அப்படியே
செய்வமென் றின்றிச் சிறப்பினி லுன்னையே
சேவித் திடுமுயர்ந்த
தைவமென் றென்றும் தளரா திருத்துக
தாயே தமிழணஙகே! (2)

நீயே யெனக்குடல் நீணிலத் தென்றும்
நிலைத்திருக் கினறவளாம
நீயே வுடைமை உயிரென வேதான்
நினைத்திருக் கின்றேனுன்!
சேயே யெனவெனைச் செப்பிடப் பெற்றாய்
செகமொழி கட்செல்லாம்
தாயே யெனவே தனித்துத் தழைத்திடுந்
தாயே தமிழணங்கே! (3)

களைத்திடு கின்றேன் கயமை விரும்பிடுங்
காசினி தன்னிலென்றும்
பிழைத்திடு கின்றேன் பெருவிருப் புற்றெனைப்
பேணிடு வாயென்றே
அழைத்திடு கின்றேன் அருளை யளித்தே
அவதி யகல்வித்துத்
தழைத்திட வைப்பாய் தலைமைப் புலமையில்
தாயே தமிழணங்கே! (4)

சங்கப் புலவோர் தமையா தரித்தாய்
தனித்துப் பினர்வந்த
துங்கப் புலவோர் தமையும் புரந்தாய்
துணையா யுடனிருந்தாய்!
இங்கப் புலவோர் இலங்கத் தகுமா
றியற்றிய தேபோலுந்
தங்கப் புலவோ னெனவெனை மாற்றுக
தாயே தமிழணங்கே! (5)

பொங்கி வழிந்திடும் புத்தம் புதிய
புதுமைக் கலையெல்லாம்
இங்கு வளர்ந்திட ஏற்றது செய்திட
யென்று மெனக்குரமீந்
தெங்கு மெனைத்தவிர்த் தேகிப் பிரிவதற்
கெண்ணு தெளியனொடே
தங்கி யிருந்தருள் தாங்கிப் புரந்தருள்
தாயே தமிழணங்கே! (6)

எக்கா லமும்நான் எழிற்கலை யாய்ந்ததி
னினபமு மெய்திடவே
மிக்கா ருறவும் மிகுந்திடு லூக்கமும்
மேதினி மீதினிலே
திக்கா றுடனே ரிரண்டிலு மென்னைத்
தெரிந்தா தரிக்கின்ற
தக்கா ருறவும் தருதற் கிரங்குக
தாயே தமிழணங்கே! (7)

நெஞ்ச மடக்கு நிலையில் நிறுத்து
நினைத்த நினைத்தபடி
மிஞ்ச விடாதே விழுமிய தொண்டில்
விருப்பம் விளைவித்துச்

செஞ்சொற் கவிபல செய்திடச் செய்க
சிறியே னெனை நீதான்
தஞ்ச மெனக்கொண் டிருக்கிறே னுதலின்
தாயே தமிழணங்கே! (8)

வாரணி கொங்கை வனிதையர் காதல்
வளர்வித் துடையாமல்
சீரணி கொண்ட செழுந்தமிழ்க் காவியம்
செய்யுந் திறத்தின ளுய்ப்
பேரணி கண்ட பெருங்கவி யாகிப்
பிழைத்திருப் பேனம்மா
தாரணி காணத் தனயனைக் காத்தருள்
தாயே தமிழணங்கே! (9)

அரசியற் சூதோ அடுத்தவர் சூதோ
அயலவர் தம் சூதோ
சரசமி டுங்குணத் தையலர் சூதோ
தமியனைக் கெடுக்காமல்
பரசுவா ரெங்கணும் பல்குமா றென்னைப்
பல முறச் செய்திடுக
சரிசம மின்றித் தனித்த தனிப்புகழ்த்
தாயே தமிழணங்கே (10)

(வாழ்த்து)

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியரோ!
வாழ்க தமிழ்க்கலை வாழ்க தமிழ்க்கலை
வாழிய வாழியரோ!
வாழ்க தமிழ்க்குலம் வாழ்க தமிழ்க்குலம்
வாழிய வாழியரோ!
வாழ்க தராதலம வாழ்க தராதலம்
வாழிய வாழியரோ!

---